வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු






Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.11.2023 வியாழக்கிழமை | இதழ் : 333 | பக்கங்கள் : 16

## அரசமைப்பை மீறிய ரணிலுக்கு எதிராக குற்றப் பிரேரணையை கொண்டு வரலாம்

### சபையில் கூறினார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, நவ. 09

சட்டத்தின் அடிப்படையில் நாட்டில் தற்போது பொலிஸ்மா அதிபர் கிடையாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபர் நியமனம் விவகாரத்தில் அரசியலமைப்பை மீறியுள்ளார். ஆகவே அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டு வர முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் இடம்பெற்ற வாதப் பிரதி வாதத்தின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் கூற்றொன்றை முன்வைத்த எதிர்க் கட்சித்தலைவர் சஜித்

11

## தூத்துக்குடியில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் சொகுசு கப்பல் சேவை ஜனவரியில்

### வாகனங்களையும் ஏற்றிச் செல்வதற்கு வசதி 80 கிலோ எடை பயணிகள் எடுத்து செல்லலாம்

சென்னை, நவ. 09

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு மீண்டும் பயணிகள் சொகுசுக் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு மீண்டும் பயணிகள் சொகுசு கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை மையமாகக்கொண்டு, தூத்துக்குடி -

11

### கிரிக்கெட் நிறுவனத்துக்கு எதிரான வழக்கு:

# நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்பு பக்கச்சார்பானது!

### சூதாட்ட ஷம்மியா, நானா என ஜனாதிபதி முடிவுக்கு வரட்டும் சபையில் விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆவேசம்



கொழும்பு, நவம்பர் 09

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட இடைக்கால குழுவுக்கு இடைக்கால தடைவிதிக்கப்பட்டது பக்கச்சார்பான தீர்ப்பு என தெரிவித்துள்ளார் விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

சூதாட்ட ஷம்மியா அல்லது ரொஷானா என இரண்டில் ஒரு முடிவை ஜனாதிபதி எடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

11



## சமஷ்டி தீர்வே தமிழர்களை நிம்மதியாக வாழவைக்கும்

### வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 09

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நிம்மதியாகவும், சுயமாகவும் தமக்கான அடையாளத்துடன் வாழ முடியும் என வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

11

## கிரிக்கெட் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் ஆதாயம்

### அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.09

ஒரு வருடத்திற்கு முன்னர் நாட்டு மக்கள் கஷ்டப்பட்ட போது உணர்வற்ற எதிர்க்கட்சியினர் கிரிக்கெட் விவகாரத்தில் அக்கறை காட்டுவது மகிழ்ச்சியளிக்கிறது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

11

## இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை நீக்கும் விவாதம் இன்று சபையில்!

கொழும்பு, நவ. 09

இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகிகளை நீக்குவதற்கான கூட்டுத் தீர்மானத்தை இன்று பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.

விவாதத்திற்கு பிறகு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இலங்கை கிரிக்கெட்டின் தற்போதைய நிர்வாகம் மீதான அதிர வைக்கும் பெரும் ஊழல் மோசடி, நிர்வாக செயற்றிறனின்மை உள்ளிட்ட

11

## சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுகிறார் ஜனாதிபதி ரணில்!

### ஜீ. எல். பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

அரசியலமைப்பு குறித்த எந்தவொரு அக்கறையும் இல்லாது ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க செயல்படுவதாக பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, ஜீ. எல். பீரிஸ் இந்த

11

## தனியார் காணிகளை அபகரித்து கனிய மணல் அகழ அனுமதியா?

### எதிர்த்து மக்கள் போராட்டம்



மன்னார், நவ. 09

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்ணையன் குடியிருப்பு பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடைமுறைப் படுத்தும் கனியவள மணல் அகழ்வுக்கான ஆவணம் சட்ட பூர்வமாக

11

## கச்சதீவு குறித்து இந்திய அரசுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதா?

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, நவ. 09

இந்தியா வழங்கியுள்ள கடனை இரத்து செய்து கொள்வதற்காக இலங்கையில் வடக்கு கடல் எல்லை மற்றும் கச்சதீவு ஆகிய விவகாரம் தொடர்பில் அந்நாட்டுடன் அரசு ஏதேனும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதா என்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா.

பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு,

" இந்திய மீனவர்களுக்கு வடபகுதிக்கு வருவதற்கு 'பாஸ்' நடைமுறை வழங்குவது தொடர்பில் பேச்சு

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

இரா. சம்பந்தன் எம்.பி. பதவிவிலக வேண்டும் என்று சுமந்திரன் கருத்துத் தெரிவித்திருந்த தொலைக்காட்சி பேட்டி குறித்து, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பாக நேற்றைய இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அந்தச் சம்பவம் தொடர்பாக, ‘இரா.சம்பந்தன் நீண்டகாலமாக பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்காமல், சம்பளம் மற்றும் சலுகைகளை பெறுவதாகவும், இது ஊழல் இல்லையா? எனவும் சுமந்திரன் வினவியுள்ளார்.’ என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியதாக வெளிவந்த செய்தி குறித்தே அந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

சுமந்திரன் அவ்வாறு வினவவில்லை என்றும், அதனை தொலைக்காட்சி நிகழ்ச்சியை நடத்தியவர் தான் கேட்டார் என்றும் நேற்றைய பத்தியில் தெளிவுபடுத்தியிருந்தேன். அதாவது அங்கு என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்ளாமல் ஒரு தலைவர் கருத்து தெரிவிப்பதா? என்றே கேள்வி எழுப்பியிருந்தோம். ஆனால், அந்தப் பத்தியைப் படித்துவிட்டு நேற்றுக் காலையே ‘ஈழநாடு குழுமத் தலைவரை தொடர்புகொண்ட சுரேஷ் பிரேமச்சந்திரன், சம்பந்தன் ஊழல் செய்வதாக தொலைக்கட்சியில் புகார் தெரிவித்த போது, சுமந்திரன் - அது ஊழலே அல்ல என்று வாதிடுவதற்குப் பதிலாக சம்பந்தன் பதவி விலகவேண்டும் என்று கேட்டதையே தான் கண்டித்ததாகவும், ஆனால் பத்திரிகையில் வந்த செய்தி தவறானது என்றும் விளக்கமளித்திருக்கிறார்.

அவர் அவ்வாறு சொல்லவில்லை என்றால், பிழையாக செய்தி வெளிவந்த உடனேயே அதனை மறுத்திருக்கவேண்டும். ஆனால் அவர் அவ்வாறு மறுக்காதபோது அதனை அவர் கூறியதாகவே கொள்ளவேண்டி வந்தது என்பதை இங்கே பதிவு செய்கின்றோம்.

இனி இன்றைய விடயத்திற்கு வருவோம்.

தொலைக்கட்சிகளில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் எதனை மக்கள் அதிகம் பார்க்கிறார்கள் என்பதை கணிப்பிட்டு (ரி.ஆர்.பி)வெளியிடுவதற்கென்று உலகம் எங்கும் நிறுவனங்கள் இருக்கின்றன. ஒரு வீட்டில் உள்ள தொலைக்காட்சியில் எந்த சனலை பார்க்கிறார்கள் என்பதையும் அதிலும் எந்த நிகழ்ச்சியை பார்க்கிறார்கள் என்பதையும் அறிந்து ரிஆர்பி வெளியிடப்படும். இலங்கையில் அதனை அறிவதற்கு ஒரே நிறுவனமே இருந்தது. அவர்கள் நாடு முழுவதும் சுமார் ஐநூறு வீடுகளில் தொலைக்கட்சிகளில் ஒரு கருவியை பொருத்தியிருப் பார்கள். அதனூடாகவே தரவு களை பெற்று ரி.ஆர்.பி வெளியிடுவார்கள். ஆக, அண்ணளவாக ஒருகோடி தொலைக்காட்சிகளில் மக்கள் எதனைப் பார்க்கிறார்கள் என்பதை ஐநாறு தொலைக்கட்சிகளை வைத்தே இலங்கையில் ரி.ஆர்.பி வெளியிடப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு கருவியே பொருத்தப்பட்டிருந்தது.

அந்த ரி.ஆர்.பியை வைத்தே விளம்பரதாரர்கள் எந்த சனலுக்கு அதிகம் பார்வையாளர்கள் இருக்கிறார்கள் என்பதை பார்த்து விளம்பரத்தை கொடுப்பார்கள்.

என்ன நடக்கின்றது என்றால், எங்கே எங்கே அந்த கருவியை பொருத்தியிருக்கிறார்கள் என்ற தகவலைப் பெற்று அந்த அந்த வீட்டுக்காரர்களை ‘கவனிக்கும்’ சனல்கள் தான் ரி.ஆர்.பியில் முன்னணியில் இருக்கும்.

இந்த விடயம் தான் அந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

‘ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்

கையில் 10 வீதத்திற்கும் குறைவானவர்களே நம்பிக்கை வைத்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் அமைப்பு நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவித்துள்ளது.’

இதுவே அந்தச் செய்தி.

இலங்கையில் இதுபோன்ற கருத்துக்கணிப்புக்களை அந்த நிறுவனம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை செய்துவருவதாக கூறியிருக்கின்றது. கருத்துக் கணிப்புக்கள் என்றால் பரவலாக பல இடங்களிலும் எடுக்கப்படும். அப்படி எடுப்பதெனில் பொது இடங்களில், பஸ் நிலையத்திலோ அல்லது மக்கள் கூடும் இடங்களிலோ எடுக்க வேண்டும். எங்குமே அப்படி ஒன்று நடைபெற்றதாகவும் இதுவரை நாம் அறிந்ததில்லை.

அதற்காக ரணிலின் செல்வாக்கு குறையவில்லை என்று நாம் வாதிட வரப்போவதில்லை. அது தேர்தல் ஒன்றில் தெரிய வந்துவிடும்தானே. ஆனால், இந்த கருத்துக்கணிப்பை நடாத்திய நிறுவனத்தின் தலைமை அதிகாரி அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர்களை மாத்திரம் சந்தித்து கலந்துரையாடிய புகைப்படம் ஒன்று தெற்கில் சமூக வலைத் தளங்களில் பரவலாக பகிரப்பட்டு வருகின்றது.

அது ஒரு நடுநிலையான நிறுவனம் என்றால், அது இதுபோன்ற எதிரணிக் கூட்டங்களில் மாத்திரம் கலந்து கொள்வது அதன் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கி விடுகின்றது.!

**-ஊர்க்குருவி.**

# தென்மராட்சி பிரதேச செயலக பண்பாட்டு விழா





யாழ்ப்பாணம், நவ. 09

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகமும் தென்மராட்சி பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய பண்பாட்டு பெருவிழா நேற்று காலை 9.00 மணிக்கு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்றது

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரம், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் சி.சுரேந்திரனும் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி சிவன் கோவில் முன்றிலில் இருந்து நாதஸ்வர இசையுடன் நட்டுவாங்கம் முழங்க உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், வரணி மத்திய கல்லூரி , கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் தமிழ் இன்னிசை நிகழ்வுடன் விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்

தென்மராட்சி பிரதேச கலாசார பேரவை உபதலைவரும் சைவப்புலவருமான கா.கமலநாதன் மிருதங்க வித்துவான் அமரர் ஆழ்வான் வல்லியின் அரங்கத் திறப்புரையினை ஆற்றினார்

கைதடி இயல் சேத்திரா கல்வி மன்ற மாணவிகளின் வரவேற்பு நடனமும்,மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவிகளின் சிவன் நடனம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் , சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள், யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள்,கச்சாய் மகா வித்தியாலய ஆசிரியர்கள் ஆகியோரின் பல இசைக் கருவிகள் ஒன்று சேர்த்து வழங்கிய பல்லியம் இசை நிகழ்ச்சியும், பூர்ணா நர்த்தனாலய மன்றத்தினைச் சேர்ந்த சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம், கைதடி இயல் சேத்திரா கலை மன்ற மாணவிகளின் காலிங்க நர்த்தன நடனம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாண்புறு மாணவ சமுதாயம் மாணவர் திறன் விருத்தி போட்டி பேச்சு , கட்டுரை சுவரொட்டி ஓவியம் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஓவியப் போட்டி மற்றும் தேசிய கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

கலைஞர்கள் இளங்கலைஞர் விருது மற்றும் கலைச் சாகரக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# மின்சாரம் தாக்கியதில் 14 வயது சிறுவன் பலி!

திருமலை, நவ. 09

திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவுக்கு ஆறாம் கட்டை ஐயப்பன் கோயிலில் பூசை உதவியாளராக கடமை ஆற்றி வந்த 14 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹர ஜோதி மண்டல பெருவிழா இடம் பெற இருக்கின்ற நிலையில் குறித்த கோயிலில் நிறம் பூசும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் பூசை உதவியாளரான குறித்த சிறுவன் கோயிலுக்கு மேல் மாடிக்குச் சென்று மின் குமிழ்களை பொருத்திக் கொண்டிருந்த வேளையில் மின்சாரம் தாக்கியதாகவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் டயகம பகுதியைச் சேர்ந்த திருச்செல்வன் லுகநாத் (வயது-14) எனவும் தெரியவருகிறது.

உயிரிழந்த உதவி பூசாரியின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மரணம் தொடர்பிலான விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# விசப் பாறை மீன் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, நவ. 09

இலங்கையின் ஆழமற்ற கடற்பகுதிகளில் காணப்படும் விசப் பாறை மீன்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாறை மீன்கள் மக்களை கடித்த நிலையில்,கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் பலர் அனுமதிக்கப்பட்டதாக பல செய்திகள் அண்மைக்காலமாக பதிவாகியுள்ளன.

ஒட்டுண்ணியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜானக ரூபன் கூறுகையில், ‘கோன் மஹா - ஸ்டோன் ஃபிஷ்’ என நச்சு மீன் இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கல் மீன்கள் மணல் அல்லது இடிபாடுகள் நிறைந்த பாறை அடுக்குகள், ஆழமற்ற தடாகங்கள் மற்றும் குறைந்த அலைகளின் போது சிறிய குளங்களில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.மீன்களின் மெதுவான இயக்கம் காரணமாக அவை பெரும்பாலும் உருமறைப்பு மற்றும் சில நேரங்களில் பாசிகளால் மூடப்பட்டிருக்கும், என்றார். இந்த மீன்கள் இனப்பெருக்க நோக்கத்திற்காக கரைக்கு அருகில் வருவதாகக் கூறிய அவர், மீனின் முதுகில் பல முதுகெலும்புகள் உள்ளன. அவை விசம் உட்கொண்டவை என்றார்.கடலில் குளிக்கும் போது அவதானமாக இருக்குமாறு பொது மக்களை எச்சரித்த அவர், குளிக்கும்போது செருப்பு அணிந்து செல்லுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
09.12.2023 வியாழக்கிழமை

சோபகிருது வருடம், ஐப்பசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழர் தரப்பு கருத்தில் கொள்ளவேண்டியது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கு ஒப்பீட்டடிப்படையில் முன்னைய நிலையிலிருந்து, 10 விகிதத்தால், குறைந்திருப்பதாக வெரிட்டே - எனப்படும் கொழும்புமைய அரசு சாரா நிறுவனம் தெரிவித்திருக்கின்றது. இதுபோன்ற கருத்துக் கணிப்புகள் கடந்த காலத்திலும் வெளியிடப்பட்டிருக்கின்றன. காலத்திற்கு காலம் அரசியல் கட்சிகளின் செல்வாக்கு தொடர்பில் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் கருத்துக் கணிப்புகளை வெளியிடுவதுண்டு - ஆனால் அவ்வாறான கருத்துக் கணிப்புகள் அனைத்தும் அச்சொட்டாக சரியாக இருந்ததில்லை. கருத்துக் கணிப்புகளானவை, எழுந்தமானமாக தெரிவு செய்யப்படும் நபர்களால் தெரிவிக்கப்படும் அப்பிராயங்களின் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன. இவ்வாறான கருத்துக் கணிப்புகளுக்கு பின்னால் சில அரசியல் நிகழ்சிநிரல்களும் இருப்பதுண்டு.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க தொடர்பான கருத்துக் கணிப்பையும் நோக்கவேண்டியிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் ஏற்கனவே சில அபிப்பிராயங்கள் உண்டு. அவர், ராஜபக்ஷக்களின் நாடாளுமன்ற பலத்தில் தங்கியிருக்கும் நிலையில், அவரால் கூறப்பட்ட விடயங்கள் எதனையும் முன்னெடுக்க முடியவில்லை. குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பில் ரணில் வழங்கிய வாக்குறுதிகள் எவையுமே நடைமுறைக்கு வரவில்லை.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கு தமிழ் மக்கள் மத்தியில்தான் மோசமாக குறைந்திருக்கவேண்டும் ஆனால் வெரிட்டே போன்ற, கொழும்பு மைய அரசுசாரா நிறுவனங்கள் தமிழ் மக்களை கருத்தில் கொண்டு, இவ்வாறான கணிப்புகளை மேற்கொண்டிருக்காது. தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தி சிந்திக்கும் போக்கு எந்தக் காலத்திலும் கொழும்புமைய அமைப்புக்களிடம் இருந்ததில்லை. அவர்களது பார்வைகள் அனைத்துமே கொழும்பு மேட்டுக் குடியின் பார்வையை முன்வைப்பதாகவும், அதற்கப்பால் சிங்கள மக்களின் மனோநிலையிலிருந்து விடயங்களை நோக்குவதாகவுமே இருப்பதுண்டு.

இந்த அடிப்படையில் ரணில் தொடர்பான வெரிட்டேயின் கணிப்பும் சிங்கள மக்களின் மனோநிலையை கருத்தில் கொண்டதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சிங்கள அடித்தள மக்கள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் எந்தக் காலத்திலும் சாதகமான அபிப்பிராயங்கள் இருந்ததில்லை. ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவின் மோசமான வீழ்சியும், நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததன் காரணமாகவுமே, ரணிலால் ஜனாதிபதியாக முடிந்தது. இவ்வாறானதொரு நிலையில் நாட்டை வழிநடத்தும் பொறுப்பை ரணில் ஏற்றுக்கொண்டார்.

ரணிலை பொறுத்தவரையில், கிடைத்தவரைக்கும் இலாபம் என்னுமடிப்படையில்தான், விடயங்களை கையாள முற்பட்டார். மக்கள் ஆணையுடன் ஜனாதிபதியாவதற்கு ரணிலுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது - வெளித்தரப்புக்களின் ஆதரவும் அவருக்கு இருக்குமாயின் ரணிலால் அதிகாரத்தை கைப்பற்ற முடியும். இந்த நிமிடம் வரையில் ரணிலுக்கு போட்டியாக களமிறங்கக் கூடிய ஒருவர் தென்னிலங்கையில் வெளிப்படவில்லை. ஒருவேளை ரணிலையும் ஓரங்கட்டக் கூடிய நிலையில், ஆளுமைமிக்க ஒருவரை அனைத்து தரப்புக்களுமாக, இணைந்து நிறுத்தினால் ரணிலால் வெற்றிபெற முடியாது - அவ்வாறானதொரு சூழலில் ரணில் போட்டியிடப் போவதுமில்லை.

ரணிலின் செல்வாக்கு குறையுமாக இருந்தால், அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்படலாம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால் நாடு மீண்டும் ஒரு நெருக்கடி நிலைக்குள்ளும் செல்லலாம். மக்களை தூண்டிவிடக் கூடிய தரப்புக்கள் வலுவடையும். அதேவேளை ரணிலின் செல்வாக்கு குறைந்தால், தனது வெற்றிக்காக பல்வேறு தரப்புக்களுடன் அவர் சமரசம் செய்ய நேரிடும். அவ்வாறான பின்னணியில், ரணில் ஜனாதிபதியானாலும் கூட, அவரால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை. இந்த இடத்தில் தமிழ் மக்களின் தலைவர்கள் என்போர்கள், தனியாக நிகழ்சிநிரல் தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்.”*

**- மூப்பர் அம்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)**



# தபால் ஊழியர்கள் நேற்று முதல் போராட்டம்

*கொழும்பு, நவ. 09*

*தபால் திணைக்களத்தின் வளங்களை விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சி செய்வதாகத் தெரிவித்து ஒன்றிணைந்த தபால் முன்னணியால் இரண்டு நாட்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*நுவரெலியாவில் உள்ள பிரசித்திபெற்ற தபால் நிலையத்தை தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்த நிலையிலேயே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், நேற்று முதல் மூன்று நாட்கள் அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறையையும் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)*

# கசினோ உரிமையாளர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டதா?

## அமைச்சர் சபையில் விளக்கம்

*கொழும்பு, நவ. 09*

*கசினோ உரிமையாளர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் பொய்யானவை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். மதுபானம் உள்ளிட்ட நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் வகையில் அரசாங்கம் அதிக வரிகளை விதித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.*

*ருவன்வெல்ல பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனை கூறினார். (அ)*

# மட்டக்களப்பில் 8 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி!

*மட்டக்களப்பு, நவ. 09*

*மட்டு, வவுணதீவில் குளவித் தாக்குதலுக்கு இலக்கான 8 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று காலை பாடசாலைக்குச் சென்ற மாணவர்களே இவ்வாறு குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.*

*இந்நிலையில் குளவிகள் கூடுகட்டியுள்ள பகுதியில் இருந்து கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)*

# பிரசன்னவின் பெயரை கூறிய இருவர் கைது!

*கொழும்பு, நவ. 09*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பெயரைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் கலல்கொட பிரதேசத்தில் காணிகளை நிரப்பிய இருவர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.*

*தலவத்துகொட, கலல்கொட பிரதேசத்தில் சட்டவிரோதமாக காணி சுவீகரிப்பு இடம்பெறுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.*

*கெக்கிராவ மற்றும் மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும அவர்களிடமிருந்து டிப்பர் இயந்திரம் மற்றும் மண் அகழ்வு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படட்டுள்ளது.*

*இந்நிலையில் குறித்த நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் இவ்வாறான அனுமதியற்ற காணி நிரப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.*

*இதனையடுத்து கூட்டுத்தாபனத்தின் விசேட அமுலாக்கப் பிரிவு 24 மணி நேரமும் செயற்படவுள்ளதாகவும், ஏதேனும் ஒரு பிரதேசத்தில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் அல்லது மீள் நிரப்பு நடைபெற்றால், அதுபற்றி பொதுமக்கள் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 011-2885357 அல்லது 011-2868002 ஆகிய எண்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி அறியப்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 09 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 23**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : துவாதசி**




**மேடம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்த சில காரியங்கள் தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட விஷயங்கள் இன்று முடியும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
தைரியமாக சில ம்க்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
இதுவரை இருந்த டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். போராடி வெல்லும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருச்சிகம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகப் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும். சாதிக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்ப தால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீ னத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். நன்மைகள் நடக்கும் நாள்.

# தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு ஆட்சியதிகாரம் கிடைக்காது

## பெரியார் சிலை குறித்த அண்ணாமலை பேச்சுக்கு அமைச்சர் சேகர்பாபு பதிலடி

**சென்னை, நவ. 09**

**கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் வந்தாலும் வருமே தவிர, பாஜகவுக்கு ஆட்சி அதிகாரம் என்பது தமிழகத்தில், எத்தனை குட்டிக்கர்ணங்கள் அடித்தாலும், எத்தனை ஐடி ரெய்டுகள் நடத்தினாலும், எத்தனை அமலாக்கத்துறை ரெய்டுகள் நடத்தினாலும் கிடைக்காது. தமிழகத்தைப் பொறுத்தவரை இது திராவிட மண்" என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.**

தமிழ் வளர்த்த இத்தாலிய பேரறிஞர் வீரமாமுனிவரின் பிறந்தநாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த உருவப்படத்துக்கு தமிழக அரசு சார்பில் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், அமைச்சர்கள் சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், சாமிநாதன், மேயர் பிரியா உள்ளிட்ட பலர் கலந்துகொன்டனர்.

பின்னர் அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், திருச்சி ஸ்ரீரங்கம் கோயில் முன்பாக உள்ள பெரியார் சிலையை அகற்ற வேண்டும் என்று பாஜக தலைவர் அண்ணாமலை பேசியிருப்பது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "ஆத்திகர்களும், நாத்திகர்களும் ஒருசேர வாழும் நாடு இந்த நாடு. இதில் பெரியார் கொள்கைகளோடு, இந்து மதத்தையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில்தான், இந்த அரசு நடந்து கொண்டு இருக்கிறது.

கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் வந்தாலும் வருமே தவிர, பாஜகவுக்கு ஆட்சி அதிகாரம் என்பது தமிழகத்தில், எத்தனை குட்டிக்கர்ணங்கள் அடித்தாலும், எத்தனை ஐடி ரெய்டுகள் நடத்தினாலும், எத்தனை அமலாக்கத்துறை ரெய்டுகள் நடத்தினாலும் கிடைக்காது. தமிழகத்தைப் பொறுத்தவரை இது திராவிட மண். தமிழக முதல்வர் ஸ்டாலின் ஒரு இரும்பு மனிதர்.

தமிழகத்தில் இன்னொரு கால் நூற்றாண்டுக்கு, திமுக ஆட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் ஆட்சி அமைப்பது குறித்து நினைத்துப் பார்க்கும் அளவுக்கு ஒரு சூழ்நிலை நிலவவில்லை. தமிழக முதல்வரின் அரும்பணியும், மக்கள் நலத் திட்டங்களும், ஏற்கெனவே இருக்கும் திமுகவின் வாக்கு வங்கியில் மேலும், 20 சதவீதம் கூடியிருக்கிறது. எனவே, அண்ணாமலை போன்றவர்களுக்கு அதிகாரத்தில் கையெழுத்திடுகின்ற வாய்ப்பை தமிழக மக்கள் எந்நாளும் வழங்கமாட்டார்கள் -என்றார்.

(அ)

# அதிமுக பெயர், கொடி, சின்னத்தைப் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து ஓபிஎஸ் முறையீடு

*சென்னை, நவ. 09*

அதிமுகவின் பெயர், கொடி, சின்னம் போன்றவற்றை ஓபிஎஸ் தரப்பு பயன்படுத்த விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஜூலை 11ஆம் திகதி நடந்த அதிமுக பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட 4 பேரை கட்சியில் இருந்து நீக்கியும், பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதை எதிர்த்து ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது. இந்த நிலையில், அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர்பேடு போன்றவற்றை ஓ.பி.எஸ் தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.சதீஷ்குமார் நேற்று முன் தினம் பிறப்பித்த உத்தரவில், பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும் பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை எதுவும் விதிக்கவில்லை. எனவே, அதிமுக பெயர், கொடி, சின்னம் போன்றவற்றை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓ.பி.எஸ் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்த கூடாது என்று இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.மகாதேவன் மற்றும் முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் ஓ.பி.எஸ் தரப்பில் ஒரு முறையீடு செய்யப்பட்டது. தனி நீதிபதி பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய உள்ளதாகவும், அந்த மனுவை அவசர வழக்காக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்றும் முறையிடப்பட்டது. இந்த முறையீட்டைக் கேட்ட நீதிபதிகள், மனு தாக்கல் செய்யும் நடைமுறைகள் முடிந்து, எண்ணிடும் நடைமுறைகள் முடிவுற்றால் இந்த வழக்கை நாளை வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

(அ)

# தமிழகத்தில் 2 நாட்கள் கனமழை

*சென்னை, நவ. 09*

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல சுழற்சியால் குறைந்த காற்றழுத்த பகுதி உருவாகி உள்ளது.

மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி ஒன்று உருவாகி உள்ளது.

இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றும், நாளையும் கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடையும் பட்சத்தில் தென் மாவட்டங்களில் கனமழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்கி இன்று முதன் முதலாக காற்றழுத்த தாழ்வு உருவாகி உள்ளது. இது அடுத்து வரும் நாட்களில் வலுபெற்றால் தமிழகத்தில் கனமழையை எதிர்பார்க்கலாம்.

பருவமழை தொடங்கி 20 நாட்கள் ஆகியும் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகாததால் தமிழகத்தில் மழைப்பொழிவு குறைவாக உள்ளது.

வழக்கமாக தீபாவளி பண்டிகை நேரத்தில் பலத்த மழை பெய்யும். ஆனால் இந்த வருடம் எதிர்பார்த்த மழை இல்லை. ஒருசில இடங்களில் மட்டுமே மழை பெய்கிறது.

ஒரு பகுதியில் பெய்தால் மற்றொரு பகுதியில் மழை பெய்வது இல்லை. மழையும் தொடர்ச்சியாக பெய்யாமல் விட்டு விட்டு பெய்கிறது.

புதிய காற்றழுத்த தாழ்வு பகுதியின் நிலவரம் குறித்து ஆராய்ச்சியாளர்கள் கண்காணித்து வருகின்றனர். நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. (அ)

# நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும் நாளில் பாராளுமன்றைக் கலைத்தால் அதற்கு ஆதரவு

## ஜே.வி.பியின் ரில்வின் சில்வா அறிவிப்பு



கொழும்பு, நவ. 09

**"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் நாளில் பாராளுமன்றமும் கலைக்கப்படும் என்ற யோசனை முன்வைக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படும்." - என்று ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,**

இன்னும் இரு வருடங்களுக்கு தேர்தல் நடத்தப்படாது என்ற கருத்து சமூகத்தில் உருவாக்கப்பட்டுவருகின்றது. உள்ளாட்சிசபைத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன ஒத்திவைக்கப்பட்டது போல் ஜனாதிபதித் தேர்தலும் பிற்போடப்படலாம் என சிலர் நினைக்கின்றனர். இதற்கு சாத்தியமில்லை. ஜனாதிபதி தேர்தல் கட்டாயம் நடத்தப்பட்டாக வேண்டும்.

உள்ளாட்சிசபைகள் மற்றும் மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாதபோதிலும் அவற்றை நிர்வகிப்பதற்கு அரசமைப்பில் ஏற்பாடு உள்ளது. விசேட ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சிச் சபைகளைம், ஆளுநர் ஊடாக மாகாணசபைகளையும் நிர்வகிக்கலாம். ஆனால் பாராளுமன்ற தேர்தல் விவகாரத்தில் இந்த அணுகுமுறை பொருந்தாது.

தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நீடிக்கப்பட வேண்டுமானால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அந்த சர்வஜன வாக்கெடுப்புகூட தேர்தல் தான். எனவே, அந்த யோசனை வந்தால் மக்கள் ஆதரவுடன் தோற்கடித்து விடலாம்.

ஜனாதிபதி பதவியை ஒரு நிமிடமாவது வெற்றிடமாக வைக்க முடியாது. சிலவேளை ஜனாதிபதி பதவியை வகிப்பவர் இறந்தால்கூட பிரதமர் அந்த இடத்துக்கு வந்துவிடுவார். அதன்பின்னரே பாராளுமன்றம் ஊடாக தேர்வு நடக்கும்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும். தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்த வருடம் நவம்பரில் முடிவடைகின்றது. அப்படியானால் ஒக்ரோபருக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

சிலவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து தேர்தலை நடத்தாமல் இருக்கக் கூடும். அதனை செய்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலம் அவசியம். அதேபோல சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அவ்வாறு ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு மக்கள் ஆணையற்ற, ஊழல் மோசடியில் ஈடுபட்ட ஆட்சியாளர்கள் உள்ள தற்போதைய நாடாளுமன்றத்துக்கு அதன் அதிகாரத்தை வழங்க முடியாது. எனவே, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் நாளிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அதனை நாம் தோற்கடிப்போம்.-என்றார்.

# ஹிக்கடுவ கடற்கரையில் பிரிட்டன் பிரஜை மரணம்

கொழும்பு, நவ. 09

ஹிக்கடுவ நாரிகம கடற்கரையில் நீராடச் சென்ற பிரித்தானிய பிரஜை ஒருவர் அலையில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டுக்கு விஜயம் செய்து ஹிக்கடுவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த 60 வயதுடைய பிரித்தானிய பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக ஹிக்கடுவ பொலிஸார் கூறினர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று நீராடச் சென்றபோது கடல் அலையில் சிக்கிய அவரை, கடற்கரையில் உள்ள உயிர்காக்கும் படையினர் கரைக்கு அழைத்துச் சென்று பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஆயினும் அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# குவைத்திலிருந்து நாடு திரும்பிய 26 இலங்கைப் பணிப் பெண்கள்!

கொழும்பு, நவ. 09

விஸா இன்றி குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்து குவைத்தில் பல்வேறு இடங்களில் பணி புரிந்து வந்த இலங்கை வீட்டுப் பணியாளர்கள் 26 பேர், இலங்கை தூதரகத்தின் தலையீட்டின் பேரில் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்துள்ள 2000 இற்கும் மேற்பட்ட வீட்டுப் பணியாளர்களில் இந்தக் குழு இலங்கைக்கு வருவதோடு, எஞ்சிய குழுவினரும் பகுதிகளாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு வருவதாகத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக குவைத்தின் குடிவரவுத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், நீதித்துறை மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றிய இலங்கைத் தூதரகத்தின் அதிகாரிகள், இந்த வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வழக்குகளை வாபஸ் பெற்று, அவர்கள் செலுத்த வேண்டிய அபராதத் தொகையை இரத்து செய்துள்ளனர்.

அத்துடன், விமானப் பயணச் சீட்டு இல்லாத இந்த இலங்கை வீட்டுப் பணியாளர்களுக்கு இலங்கைக்கு வருவதற்கு விமான டிக்கெட்டுகளை வழங்க குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோத மீன்பிடித்த தமிழக மீனவர் 22 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 09

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 22 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் 12 தமிழக மீனவர்கள் 3 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், கடந்த 28 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் 2 படகுகளுடன் மேலும் 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதற்கமைய, குறித்த 26 தமிழக மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 தமிழக மீனவர்களில் ஒருவர், ஒரு படகின் உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டதை அடுத்து, அவரின் படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், படகின் உரிமையாளர் உள்ளிட்ட நால்வரையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை அடிப்படையில் நீதவான் விடுதலை செய்துள்ளார்.

ஏனைய 22 மீனவர்களும் எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.(அ)

# வீடுகளை உடைத்து தங்க நகைகள் திருடிய பெண் உட்பட மூவர் கைது!



யாழ்ப்பாணம், நவ. 09

இருவேறு வீடுகளை உடைத்து தங்கக் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும் உடந்தையாக இருந்த பெண் உட்பட இருவரும் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு தொகுதி நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மற்றொரு தொகுதி நகை மன்னார் மற்றும் திருகோணமலை பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

கடந்த மார்ச் மாதம் 05ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் பிரிவில் அதிகாலைவேளை ஆட்கள் இல்லாத நேரம் வீடு உடைத்து ஐந்தே கால் பவுண் நகைகளை திருடியமை, மற்றொரு வீட்டில் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி ஆட்கள் அற்ற நிலையில் 13 பவுண் நகைகளை திருடியமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

முதன்மை சந்தேக நபரான திருநெல்வேலியைச் சேர்ந்த 22 வயதுடையவரையும் நகையை வாங்கி உருக்கிய ஒருவரையும் உடந்தையாக இருந்த பெண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# மொட்டு கட்சியில்தான் இன்னமும் இருக்கிறேன்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண

கொழும்பு, நவ. 09

அடுத்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

தான் இன்னும் மொட்டு கட்சியிலேயே அங்கம் வகிப்பதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை ஆதரிப்பின்றீர்களா என எழுப்பட்ட கேள்விக்கு,

"எமது கட்சி அவ்வாறானதொரு முடிவை இன்னும் எடுக்கவில்ல. கட்சி எடுக்கும் முடிவின் பிரகாரமே எனது தீர்மானம் அமையும். நெருக்கடியான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார். ரணிலை கட்சி ஆதரிக்க முடிவெடுத்தால் அந்த முடிவை ஏற்பேன்" - என்று அமைச்சர் பதிலளித்தார். (அ)

# அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க இணக்கம்

கொழும்பு, நவ. 09

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கான ஆதரவை வழங்குவதற்கு இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு எட்டப்பட்டதாக இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரதீப் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, அஸ்வெசும திட்டத்தை நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்வதற்கு கிராம மட்டத்தில் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட நான்கு பிரிவுகளின் கீழ் நலன்புரி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கும் வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இவ்வருடத்தில் மட்டும் 62 துப்பாக்கிச் சூடுகள்!

**சபையில் பிரதமர் தகவல்**

கொழும்பு, நவ. 09

**இந்த வருடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் அறுபத்திரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த துப்பாக்கிச் சூட்டில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன் 37 பேர் காயமடைந்துள்ளதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

**பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்சன் தெனிபிட்டிய எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களை அடக்குவதற்கு உழைத்த பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொன்று அச்சுறுத்திய ஏழு சம்பவங்கள் இந்த வருடம் இடம்பெற்றுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

அதன்பின், பிரதமரின் அறிவிப்பை தொடர்ந்து, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கூறியதாவது:

பாதாள உலகத்தை ஒடுக்க பாரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். சில நடவடிக்கைகளை இங்கு குறிப்பிட முடியாது. தென் மாகாணத்தில் பெரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குற்ற வழக்குகளில் தொடர்புடைய 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். போலீசாருடன் நடந்த மோதலில் இருவர் உயிரிழந்துள்ளனர். 67 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர்.

குற்றவாளிகள் குழு சிறைக்குள் இருந்து போதைப்பொருள் கடத்துகின்றனர். கொலைகளை ஆதரிப்பது. வெளிநாடுகளில் 30 குற்றவாளிகள் மட்டுமே உள்ளனர். அவர்களும் அந்த விஷயங்களைச் செய்கிறார்கள். அந்த குழுவை அழைத்து வர ஏற்பாடுகள் நடந்து வருகிறது. வெளிநாடுகளுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறது. குற்றவாளிகளை தனி இடத்தில் தங்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது-என்றார். (அ)

# அளவுக்கு அதிகமாக பஸ்களில் அலங்காரம்!

**புதிய சட்ட விதிகள் அறிமுகம்**

கொழும்பு, நவ. 09

பொது போக்குவரத்து பஸ்கள் மற்றும் விசேட பயணங்களுக்கு பயன்படுத்தப்படும் பஸ்களின் அலங்காரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விசேட கலந்துரையாடல் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தலைமையில் இடம்பெற்றது.

இதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களம், இலங்கை பொலிஸ் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

பயணிகள், பாதசாரிகள் மற்றும் சாரதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பஸ்களை அலங்கரிப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை தயார் செய்யுமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

கடந்த சில காலமாக அளவுக்கு அதிகமான அலங்காரங்கள் காரணமாக பேருந்துகளில் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுவதாக பயணிகள் போக்குவரத்து அமைச்சுக்கு முறைப்பாடுகளை அளித்து வந்துள்ளனர்.

இதனை பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ள போக்குவரத்து அமைச்சு இதற்காக புதிய சட்ட விதிகளை உருவாக்க உத்தேசித்துள்ளது. (அ)

# ஹோமாகம பெண் கொலை; தெஹிவளை இளைஞர் கைது

கொழும்பு, நவ. 09

ஹோமாகம நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள விடுதியில் இருந்து பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணை அவரின் காதலனே கொலை செய்துள்ளதாகவும், அந்த நபர் தங்கியிருந்த விடுதியில் இருந்தே சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தெஹிவளையை சேர்ந்த 32 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பலஸ்தீன மக்களின் சக வாழ்வுக்காக கொழும்பில் சமாதான எழுச்சி நிகழ்வு





கொழும்பு, நவ. 09

பலஸ்தீன மக்கள் பூரண சமாதானத்துடன் நிம்மதியும், சுதந்திர வாழ்வும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் வீ.ஆர்.வன் அமைப்பு ஏற்பாடு செய்த சமாதான எழுச்சி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சர்வமத தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், முக்கிய பல சிவில் சமூக இயக்கங்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இலங்கைக்கான பலஸ்தீன அரசின் தூதுவர் கலாநிதி ஸுஹைர் எம். எச். டார் செயிட் கலந்து கொண்டார்.

இந்த சமாதான மாநாட்டில் பிரகடனம் ஒன்று வாசிக்கப்பட்டு அந்த மாநாட்டில் கலந்துகொண்ட சர்வமத தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக இயக்கங்கள் ஆகிய வற்றின் ஒப்புதலுடன் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு காரியாலயத்தில் குறித்த பிரகடனம் கையளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)

# மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி நீக்கம்!

கொழும்பு, நவ. 09

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி, வைத்தியர் விஜித் குணசேகர பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக, அவர் பதவி நீக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சிறீ சந்திர குப்த தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் மற்றும் பிரதம அதிகாரி உள்ளிட்ட தரப்பினர், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததாக அண்மைக்காலமாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதன்படி, அண்மையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் நீக்கப்பட்டு, புதிய தலைவராக வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னரும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய விஜித் குணசேகர, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முக்கியமான தகவல்கள் அடங்கிய பல ஆவணங்களை அழித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தின.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அத்தியாவசிய சேவையாக தபால் சேவைகள் பிரகடனம்

கொழும்பு, நவ. 09

தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தின் வளங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளது.

நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையங்களை விற்பனை செய்யும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என அதன் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.



தபால் ஊழியர்களின் போராட்டம் காரணமாக நேற்று நாடு முழுவதும் தபால் சேவைகள் பாதிக்கப்பட்டன.

தபால் ஊழியர்கள் உடனடியாக போராட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ள, தபால் திணைக்களம் உடனடியாக அழுலுக்கு வரும் வகையில் தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று முன் தினம் இரவு முதல் ரத்துச் செய்யப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் பந்துல குணவர்தன வெளியிட வுள்ளார். (அ)

# ஊழல் எதிர்ப்பு திருத்தச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றம்

கொழும்பு, நவ. 09

**ஊழலுக்கு எதிரான (திருத்த) சட்டமூலம் நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.**

**இந்த சட்டமூலம் முதலில் ஜூலை 19 அன்று வாக்கெடுப்பு இல்லாமல் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.**

எவ்வாறாயினும், அது இலங்கையின் அரசியலமைப்பிற்கு முரணானது என்ற காரணத்தினால் பின்னர் அரசாங்கத்தால் மீள பெறப்பட்டது.

இந்த சட்டமூலம், ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, பல சர்ச்சைகளுக்கும் உள்ளானது.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் உட்பட பல தரப்பினர், சட்டமூலத்தின் உட்பிரிவுகள் தொடர்பில் கவலைகளை வெளிப்படுத்தினர்.

சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்பிற்கு எதிரானது என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பாக ஒரு மனுவை தாக்கல் செய்த ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் , ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் உட்பிரிவு 28(3), 161 மற்றும் 119 உட்பட மொத்தம் 37 சரத்துகளை சவாலுக்கு உட்படுத்தியது.

கருத்துச் சுதந்திரம், மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை பாதிக்கலாம் என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் குறித்த மனுவில் சுட்டிக்காட்டியிருந்தது.

இதற்கிடையில், ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவுகளை அரசாங்கம் சமர்ப்பித்தது.

சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானவை என்றும், திருத்தங்களுக்குப் பின்னர் இந்த சட்டமூலம் மீண்டும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

சட்டமூலத்தின் 8 (3), 136, 141, 142 மற்றும் 156 ஆகிய பிரிவுகளில் மனுதாரர்கள் எழுப்பிய பல கவலைகளை நிவர்த்தி செய்யும் முயற்சியில் திருத்தங்கள் செய்யப்படும் என்றும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்த பின்புலத்தில் நேற்று இந்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. (அ)

# 2 வாகனங்கள் மீது மரங்கள் விழுந்தன



கொழும்பு, நவ. 09

கொழும்பு பிரதேசத்தை பாதித்த கடும் மழை மற்றும் காற்றின்போது கொள்ளுப்பிட்டி ஆர்.டி மெல் மாவத்தை சார்ள்ஸ் டிரைவ் வீதிக்கு அருகில் மரம் ஒன்று விழுந்ததில் இரண்டு வாகனங்கள் சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் முறிந்து விழுந்ததில் முச்சக்கரவண்டி ஒன்றும் கார் ஒன்றும் பலத்த சேதமடைந்துள்ளன.

முச்சக்கரவண்டியில் பயணித்த நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனால், அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (அ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 09

இந்த மாதத்தின் முதல் 5 நாட்களில் 22 ஆயிரத்து 202 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வருடத்தில் இதுவரையில் இலங்கைக்கு 11 இலட்சத்து 47 ஆயிரத்து 657 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் 5 நாட்களில் ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து மூவாயிரத்து 866 பேர் வந்துள்ளனர்.

அத்துடன், ஜேர்மனியிலிருந்தும் இரண்டாயிரத்து 11 பேரும், பிரித்தானியாவிலிருந்து ஆயிரத்து 539 பேரும் வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# வடக்கு-கிழக்கு தமிழர்களின் இணைப்பாட்சி கோரிக்கை தொடர்பான கண்காட்சி யாழில்





யாழ்ப்பாணம், நவ. 09

இலங்கையில் வடக்கு-கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் க. லவகுசராசா தலைமையில் வடக்கு-கிழக்கிலிருந்து வருகை தந்த பெருமளவிலான மக்களின் பங்கேற்புடன் நல்லூர் கிட்டு பூங்காவில் நேறாறு காலை நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 2022 ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய 100 நாள் செயல் முனைவின் இறுதி நாளான 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08ஆம் திகதி வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக “ ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு” வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது.

இப்பிரகடனம் வெளியிடப்பட்டு ஓராண்டு பூர்த்தி நாளான இன்று வடக்கு கிழக்கு மக்கள் ஒன்றிணையும் “ இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம்” எனும் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கு வாழ் பொது மக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழில் சங்கப் பிரதிநிதிகள், மனித உரிமை பாதுகாவலர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# வடக்குக்கு ஆறுகளை திருப்பும் திட்டம் பற்றி ஆராயப்படுகிறது!

கொழும்பு, நவ. 09

வடமாகாணத்தில் உள்ள குடிதண்ணீர் பிரச்னைகளை தீர்க்க பல்வேறு திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய கேள்வியொன்றுக்கு, நேற்று பாராளுமன்றத்தில் பதிலளிக்கையிலேயே இதனை கூறினார்.

வடக்கின் குடிதண்ணீர் பிரச்னையை தீர்க்க பல வழிகள் பற்றி ஆராயப்படுகிறது. வடக்குக்கு ஆறுகளை திசை திருப்புவது, பேராசிரியர் ஆறுமுகம் முன்வைத்த திட்டங்கள் தொடர்பில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆராய்ந்து வருகிறது. கடல்நீரை சுத்திகரித்து வழங்குவது பெரும் செலவானது. மக்களும் அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்று அவர் கூறினார். (அ)

# பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டாரா?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

கொழும்பு, நவ. 09

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியினால் 3 ஆவது தடவையாகவும் அதன் பின்னரும் அனுப்பப்பட்ட பரிந்துரைகள் எதுவும் அரசியலமைப்பு பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டு நியமிக்கப்படவில்லை. இது அரசியலமைப்பு பேரவையின் சக உறுப்பினர்களுக்கும் தெரியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக 2 சந்தர்ப்பங்களில் தலா 3 மாதங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டபோதிலும்,இரண்டாவது நியமனம் வழங்கப்படும்போது, அடுத்த நியமனம் நிரந்தர நியமனமாக இருக்க வேண்டும் என அரசியலமைப்பு பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ்மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்றாலும், அதனை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க அரசியலமைப்பு பேரவைக்கும் அதிகாரம் உள்ளதாகவும், அரசியலமைப்பின் ஏற்பாட்டு விதிகளை வியாக்கியானம் செய்வதில் எந்தப் பிரச்னையும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். (அ)

# இந்தோனேசியா நிலநடுக்கம் இலங்கைக்கு பாதிப்பு இல்லை

கொழும்பு, நவ. 09

இந்தோனேசியாவின் பண்டா கடலில் பதிவாகியுள்ள 7.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் பண்டா கடலில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தால் சேதம் அல்லது உயிரிழப்பு குறித்து எவ்வித தகவல்களையும் இதுவரை இந்தோனேசிய அரசாங்கம் வெளியிடவில்லை.

இந்த நிலநடுக்கத்திற்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. முதலில் ரிக்டர் அளவுகோலில் 6.9 என அறிவிக்கப்பட்டது. (அ)

# தபால்துறை வேலைநிறுத்தம் அம்பாறையிலும் வெற்றிகரம்





அம்பாறை, நவ. 09

**நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்க முன்னணி முன்னெடுத்துவரும் 48 மணிநேர வேலை நிறுத்தப் போராட்டம் அம்பாறை மாவட்டத்திலும் வெற்றிக ரமாக இடம்பெற்று வருகின்றது.**

இதன் காரணமாக மாவட் டத்தில் உள்ள பெரும்பாலான தபாலகங்களும் உப தபாலகங் களும் இழுத்து மூடப்பட்டுள் ளன.

நுவரெலிய தபால் நிலை யத்தை சுற்றுலா விடுதிக்காக சுவிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரி வித்தும் அதேபோன்று கண்டி பழமைவாய்ந்த தபாலகத்தை யும் கைமாற்ற எடுக்கப்படும் முயற்சிக்கும் எதிர்ப்புத் தெரி வித்து நேற்று புதன் கிழமையும் இன்று வியாழக்கிழமையுமாக மேற்படி வேலை 48 மணிநேர நிறுத்தப் போராட்டம் வெற்றி கரமாக இடம்பெற்று வருகின் றது.

இந்தப் போராட்டத்தில் தபால் அதிபர்கள் உப தபால் அதிபர்கள் மற்றும் கடை நிலை ஊழியர்கள் வரை அனைத்து தபால் ஊழியர்களும் பங்கு கொண்டுள்ளனர்.

அரச வளங்களை விற்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த வேலை நிறுத்தப்போராட்ட நடவடிக்கை அம்பாறை மாவட் டத்திலும் வெற்றிகரமாக இடம் பெற்று வருகின்றது.

அக்கரைப்பற்று அஞ்சல் அத்தியட்சகர் பிரிவில் உள்ள 13 பிரதம தபாலகங்களும் (ஒன்றைத்தவிர) 53 உபதபால கங்களும் இந்த வேலை நிறுத் தப் போராட்டம் காரணமாக இரு தினங்களும் மூடப்பட்டுள் ளதாக அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் யூ.எல்.எம்.பைஸர் தெரிவித்தார்.

தபாலகங்கள் இழுத்து மூடப்பட்டு வேலை நிறுத்தம் காரணமாக மூடப்பட்டுள்ள தாக அறிவித்தல்களும் தபால கங்களின் முன்னால் காணப்படு கின்றன.

இதன் காரணமாக இந்த இரு நாட்களும் தபால் சேவை கள் முற்றாக முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-06)

# அழியும் நிலையில் சாய்ந்தமருது பொலிவேரியன் இரும்புப் பாலம்!

அம்பாறை, நவ. 09

சாய்ந்தமருது பிரதேச செய லகப் பிரிவிற்குட்பட்ட பொலி வேரியன் சுனாமி குடியேற்ற கிராமத்திற்கு செல்லும் கிழக்கு பகுதியிலுள்ள இரும்புப் பாலம் துருப்பிடித்து ஓட்டைகள் விழுந்து போக்குவரத்திற்கு பொருத்தமில்லாத நிலையில் காணப்படுகின்றது.

சுமார் 20 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட இப் பாலத்தை தினசரி ஆயிரக்கணக் கான மக்கள் பயன்படுத்தி வரு கின்றனர்.

இப்பாலத்திற்கு அப்பால் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், மஸ்ஜிதுல் ஹிஜ்ரா பள்ளிவாசல், எம்.எஸ்.காரியப் பர் வித்தியாலயம், கால்நடை சுகாதார காரியாலயம், பெண் கள் அரபு கல்லூரி, பொது விளையாட்டு மைதானம், பல் தேவை கட்டடத் தொகுதி, குவாசி நீதிமன்றம் போன்ற அரச அலுவலகங்கள் அமைந் துள்ளன.

இப்பாலத்தினால் தினசரி நூற்றுக்கும் அதிகமாக வாக னங்களும் கனரக வாகனங்களும் பயணிக்கின்றன.

பாலத்தினூடாக வாகனங் கள் செல்லும் போது பாலத்தில் அதிரவு உணரப்படுகிறது அதே வேளை

இப் பாலத்தின் கீழ் புற்கள் வளர்ந்து பற்றைக்காடு போன் றும் , நீர்க்களைகள் வளர்ந்து மிகவும் இடைஞ்சலாக காணப் படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப் பால விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேச வாசிகள் தெரிவித்தனர். (அ)





# இறக்காமத்தின் கிழக்குப் புற எல்லை தொடர்பான சர்ச்சைக்கு நிரந்தர தீர்வு

அம்பாறை, நவ. 09

இறக்காமத்திற்கான தனி யான பிரதேச செயலகம் உரு வாக்கப்பட்டதில் இருந்து மிக நீண்ட காலமாக இருந்து வந்த இறக்காமத்தின் கிழக்குப் புற எல்லை தொடர்பான சர்ச்சைக்கு மிக சுமூகமான தீர்வு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம அவர்க ளின் தலைமையில் செவ்வாய்க் கிழமை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்காமம் எல்லை தொடர் பாக 2009.05.29 ஆம் திகதி, இல: 1603/50 இறுதியாக வெளியான அரச வர்த்தமானி மூலம் குறித்துக் காட்டப்பட் டுள்ள எல்லைகளே இறக்காமத் தின் ஆட்புல நிர்வாக எல்லை கள் எனவும் அதற்குட்பட்ட நிருவாக நடவடிக்கைகள் இறக் காமம் பிரதேச செயலகத்தினா லும் பிரதேச சபையினாலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் அரசாங்க அதிபர் காரியாலயத் தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்க்கமான தீர்மானம் எட்டப் பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இறக்காமம் பிரதேச செயலாளர், பிரதேச சபை பிரதிநிதிகள், அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர், பிரதேச சபை, நில அளவைவி யல் மேற்பார்வையாளர், அரச உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டு இவ்விடயம் ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவு அரசாங்க அதிபரினால் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எல்லைப் பிரச்னை 2009 ஆண்டு முதல் தீர்க்கப்ப டாமல் அதிகாரிகளாலும், அர சியல்வாதிகளாலும் மழுங்கடிக் கப்பட்டு வந்தது மட்டுமல்லா மல், குறித்த பிரச்சினை திரிவுப டுத்தப்பட்டு மக்களுக்கு தெளி வுபடுத்தப் படாமல் இரு பிர தேச மக்களுக்கிடையில் வெறுப் புணர்வையும் குரோதத்தையும் குறித்த தரப்பினர் வளர்த்துவந்த கவலைக்குரிய விடயமாகும். இருப்பினும் அரசாங்க அதிப ரின் இந்த நடவடிக்கை மூலம் புரையோடிப் போயிருந்த நீண்ட காலப் பிரச்னைக்கு ஒரு சுமூக மான தீர்வாக இரு தரப்பினரா லும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளது. (அ)

# புதிய தூதுவர்களாக பொறுப்பேற்றோர் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு!

திருமலை, நவ. 09

இலங்கையின் புதிய தூதுவர் களாக பொறுப்பேற்றுக் கொண்ட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், எகிப்து, இத்தாலி, கியூபா, பங்களாதேஷ், பெல் ஜியம் இராச்சியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர் கள் மற்றும் பதவி நிலைகளுக் கான பணிப்பாளர்கள் திருகோ ணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித் தம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை நேற்று முன் தினம் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண் டனர்.

இக்கலந்துரையாடலில் சுற் றுலாத்துறையை மேம்படுத்து தல், கைத்தொழில் பேட்டை ஸ்தாபிப்பு , கனிமத் துறைகளின்



அபிவிருத்தி, கூட்டு முயற்சி விவசாய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளை அவர்கள் நியமிக் கப்பட உள்ள நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடல் மேற் கொள்ளப்பட்டது.

அண்மையில் இந்த புதிய தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்த மையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கு நீர்நிலைகளில் நீர்மட்டம் திடீரென அதிகரிப்பதால் பொதுமக்கள் அவதானம்!

## கடலில் நீராடுவதனையும் தவிர்க்க வலியுறுத்து

மட்டக்களப்பு, நவ. 09

கிழக்கு மாகாணத்தின் பல் வேறு பிரதேசங்களிலும் தற் போது பரவலாக அதிக மழை வீழ்ச்சி கிடைத்து வருகின்றது.

இதனால் மாகாணத்திலுள்ள நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள் மற்றும் குட் டைகள் என்பவற்றின் நீர்மட் டம் உயர்ந்து வருகின்றது.

எனவே,பொது மக்கள் நீரேந்து பிரதேசங்களில் மிக அவதானமாக முன்னெச்சரிக் கையுடன் தொழில்பட்டு, வேண் டத்தகாத உயிரிழப்புகள் மற் றும் ஏனைய அனர்த்தங்களிலி ருந்து பாதுகாப்பு பெறவேண் டும் என அறிவுறுத்தப்பட்டுள் ளது.

நீர் நிலைகளில் நீராடி உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை கிழக்கில் கடந்த காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை மாண வர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் மிகவும் அவதான மாக இருக்குமாறு பெற்றோர்க ளின் அவதானம் இருக்க வேண் டும்.

கிழக்கு மாகாணத்திற்கு வெளி மாகாணங்களிலிருந்து வருகை தருபவர்கள் மேற்படி நீரேந்து பகுதிகளில் மிகவும் அவதான மாக நடந்து கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ திணைக் களம் அறிவித்துள்ளது. (அ)

# போரின் பின் காஸா பாதுகாப்புக்கு முழுப் பொறுப்பை இஸ்ரேல் ஏற்கும்!

## பெஞ்சமின் நெத்தன்யாகு கூறுகிறார்

டெல் அவிவ், நவ. 09

**போருக்குப் பின்னர் காஸாவின் பாதுகாப்புக்கு முழுப் பொறுப்பை ஏற்க இஸ்ரேல் தயார் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.**

**அமெரிக்காவின் ஏபிசி தொலைக்காட்சி நிறுவனத்திற்கு வழங்கிய நேர்காணலின் போதே இதனை கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

இஸ்ரேல் காலவரையின்றி பாதுகாப்புப் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும் என்று எண்ணுகிறேன், ஏனெனில், அவ்வாறு பாதுகாப்புப் பொறுப்பை ஏற்காவிடில் என்ன நடக்கும் என்பது நம் எல்லோருக்கும் கண்கூடாகத் தெரிகிறது.

பொதுவான ஒரு போர்நிறுத்தம் தமது நாட்டின் போருக்கு பங்கம் விளைவிக்கும்.

ஆனால், உத்தியோகபூர்வமான சிறிய அளவிலான போர் நிறுத்தம், இங்கொன்றும் அங்கொன்றுமாக சில மணிநேரங்கள் இதற்கு முன்னரும் நடப்பில் இருந்துள்ளன.



நிலைமையைக் கருத்தில்கொண்டு உதவி, மனிதநேயப் பொருட்கள் வர அல்லது பிணைக் கைதிகள் வெளியேற அவை சாத்தியமே. ஆனால், பொதுவான போர்நிறுத்தம் இருக்கப் போவதில்லை-என்றார்.

அனைத்துலக நெருக்குதலைப் பொருட்படுத்தாது பொதுவான போர்நிறுத்தத்தை நிராகரித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)



# சோமாலியாவில் வெள்ளப்பெருக்கு

## 40 பேர் உயிரிழப்பு

மொகடிசு, நவ. 09

கென்யா மற்றும் சோமாலியாவில் ஏற்பட்ட கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி குறைந்தது 40 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளதோடு பல வீடுகள், சாலைகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்தன.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிலை பிறப்பித்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் தெற்கு சோமாலியாவின் ஜூபாலாண்ட் மாநிலத்தில் உள்ள லுக் மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ள சுமார் 2,400 குடியிருப்பாளர்களை பாதுகாக்க அவசர மற்றும் மீட்புப் படையினர் முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# 200 இற்கும் மேற்பட்ட ஜேர்மனியர் காஸாவில் இருந்து வெளியேறினர்

பேர்ளின், நவ. 12

200 இற்கும் மேற்பட்ட ஜேர்மன் பிரஜைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் காஸாவை விட்டு வெளியேறியுள்ளதாக ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இஸ்ரேலிய இராணுவத்தால் 10,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் கடலோரப் பகுதியிலிருந்து வெளியேற உதவிய எகிப்துக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இதேநேரம் காஸாவில் மனிதாபிமான போர்நிறுத்தத்திற்கு ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

காஸாவில் உள்ள மக்களுக்கு தண்ணீர், உணவுகள், மருத்துவ உதவி தேவை என்றும் அதனை வழங்க போர்நிறுத்தம் அவசியம் என்றும் கூறியுள்ளார். (அ)

# வெளிநாட்டவர்கள் குடும்பங்களை அழைக்கும் சட்டவிதிகளில் திருத்தம்

பாரிஸ், நவ. 09

பிரான்ஸின் புதிய குடியேற்றச் சட்டப் பிரேரணையில் வெளிநாட்டவர்களது குடும்ப ஒன்றிணைவுக்கான நிபந்தனைகளில் செனட் சபை சில திருத்தங்களைச் செய்துள்ளது.

அரசின் புதிய குடியேற்றச் சட்ட மூலம் பரிசீலனைக்காகச் செனட் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

அந்தச் சட்ட மூலத்தில் முதல் இரண்டு விடயங்களை அது பரிசீலனை செய்து திருத்தங்களைச் செய்துள்ளது.

அதன்படி - குடும்ப ஒன்றிணைவுச் சட்டங்கள் கடுமையாக்கப்படுகின்றன.

குடும்ப ஒன்றிணைவுக்கான நிபந்தனைகளாகப் பின்வரும் விதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டவர் ஒருவர் தனது துணையையும் குழந்தைகளையும் அழைத்துக் கொள்வதற்கான வயது எல்லை 18 இல் இருந்து 21 ஆக அதிகரிக்கப்படுகிறது. அவர் குறைந்தது 24 மாதங்கள் வதிவிட அனுமதியுடன் பிரான்ஸ் மண்ணில் தங்கி வாழ்ந்திருக்க வேண்டும். தன்னுடையதும் தனது குடும்ப உறுப்பினர்களினதும் மருத்துவக் காப்புறுதியை அவரே தனது பொறுப்பில் செய்துகொள்ள வேண்டும். அத்துடன் பிரான்ஸுக்கு அழைக்கப்படுபவர்கள்

பிரெஞ்சு மொழியில் குறைந்தபட்ச புலமையைப் பெற்றிருக்க வேண்டும்.

சட்ட மூலத்தில் இந்த நிபந்தனைகளை செனட் சபை திருத்தி இணைத்திருக்கிறது.

நாட்டின் வலதுசாரிகளது கட்டுப் பாட்டில் உள்ள செனட் சபையின் பரிசீலனைக்குப் பின்னர் புதிய சட்ட மூலம் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் விவாதம் மற்றும் வாக்களிப்பைத் தாண்டவேண்டி இருக்கும். (அ)

# குழந்தைகள் மயானமாகும் காஸா! உடனடியாகப் போரை நிறுத்துங்கள்!!

## ஐ.நா. பொதுச் செயலர் உருக்கமான வேண்டுகோள்

நியூயோர்க், நவ. 09

"காஸா குழந்தைகளின் மயானமாகிறது. உடனடியாகப் போரை நிறுத்துங்கள்" என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஒரு மாதத்தைக் கடந்துவிட்டது. 4100 குழந்தைகள், 2640 பெண்கள் உள்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காஸாவில் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் அந்தப் பிராந்தியமே குழந்தைகளின் மயானமாகிறது. உடனடியாகப் போரை நிறுத்துங்கள் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த காசாவையும் சுற்றிவளைத்து விட்டதாகவும் வடக்கு, தெற்கென்றில்லாமல் காசாவை இரண்டாகப் பிரித்து தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தது. இஸ்ரேல் தரப்பில் இதுவரை 1400 பேர் பலியாகியுள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் பிணைக் கைதிகளாக ஹமாஸ்வசம் உள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தம் செய்ய சர்வதேச அமைப்புகள், உலக நாடுகள் பலவும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் சூழலில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு போர் நிறுத்தம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார்.

அதில் அவர், "மனிதாபிமான உதவிகள் காசாவுக்குள் சென்று சேர்வதை உறுதி செய்யவும், பிணைக் கைதிகள் பத்திரமாக வெளியேற வழிவகுக்கவும் காஸா வில் அவ்வப்போது சரியாக திட்டமிட்டு சற்றே லாவகமாக தாக்குதலை நிறுத்துவது பற்றி பரிசீலிப்போம். ஆனால் ஏற்கெனவே கூறியபடி போர் நிறுத்தம் என்பதற்கு வாய்ப்பில்லை. போர் முடிந்த பின்னர் காஸாவை முழுக் கட்டுப்பாட்டுக்குள் சில காலம் எடுத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் பொறுப்பு இருக்கிறது" -என்றார். (அ)

# தாய்வானுக்கு இராணுவத் தளபாடம் வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்பந்தம்

நியூயோர்க், நவ. 09

அமெரிக்கா தாய்வானுக்கு இராணுவ உபகரணங்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கைச்சாத்திட்டுள்ளார்.

இதற்கமைய, 80 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நானாவித நவீன இராணுவ உபகரணங்களை அமெரிக்கா குறிப்பிட்ட காலப்பகுதியினுள் தாய்வானுக்கு வழங்கவுள்ளது.

இந்த தொகை முழுமையாக அமெரிக்காவினால் இலவசமாக தாய்வானுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா 40 வருடங்களுக்கு பின்னர் முதன் முறையாக வெளிநாடோன்றுக்கு தன்னிச்சையாக இலவசமாக ஆயுதம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, உக்ரைன், ஆப்கானிஸ்தான், ஈராக், இஸ்ரேல், எகிப்து உட்பட பல நாடுகளுக்கு அமெரிக்கா மானிய அடிப்படையில் இராணுவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் அல்லது அமைப்புக்களுக்கு மட்டுமே அமெரிக்கா ஆயுத உதவிகளை மேற்கொண்டது.

ஐக்கிய நாடுகள் சபையினால் ஆயுதங்களை பெறுவதற்கான மெய்யுறுதியினை தாய்வான் பெறவில்லை. (அ)

# சபையில் அநாகரிகமான கருத்து; ஆளும்-எதிரணி பெரும் குழப்பம்!

கொழும்பு, நவ. 09

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேயரத்னவை நோக்கி, இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த அநாகரீகமான கருத்தொன்றை வெளியிட்டார் என குற்றஞ்சாட்டி, பாராளுமன்றத்தில் நேற்று ஆளும்- எதிரணியினர் பெரும் சர்ச்சையில் ஈடுபட்டனர்.**

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பிரான ரோஹினி குமாரி விஜேயரத்ன, ஓய்வூதியப் பிரச்னைத் தொடர்பாக, வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது கேள்வி எழுப்பியிருந்தார்.**

**இதற்கு பதிலளித்து பிரதமர் தினேஷ் குணவர்த்தன கருத்து வெளியிட்டார்.**

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தாலும், அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியம் தடையின்றி வழங்கப்படுவதாக பிரதமர் தெரிவித்திருந்தார்.

எனினும், இவரது இந்தக் கருத்தானது பொய்யானது என தெரிவித்த ரோஹினி குமாரி விஜேயரத்ன, அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியுமாக இருந்தால், ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியத்தை அதிகரிக்கவோ அல்லது உரிய ஓய்வூதியத்தை வழங்கவோ ஏன் அரசாங்கத்தினால் முடியாமல் உள்ளது என்று கேள்வி எழுப்பினார்.

இதனையத்து கருத்து வெளியிட்ட உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த, இந்தப் பிரச்னைகள் தொடர்பாக எதிர்வரும் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்று தெரிவித்ததோடு, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேயரத்னவை மகிழ்விப்பது எவ்வாறு என தங்களுக்குத் தெரியாது என கருத்து வெளியிட்டார்.

இவர் இவ்வாறு தெரிவித்தவுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவரது இந்தக் கருத்துக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்டவர்கள் இவரது கருத்துக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு, இராஜாங்க அமைச்சரை சபையில் இருந்து வெளியேற்றவேண்டும் என வலியுறுத்தினார்கள்.

எனினும், தான் தவறான அர்த்தத்துடன் கருத்து வெளியிடவில்லை என்றும் கேள்விக்கான பதிலையே வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தினால், இரண்டு தரப்பினரும் சபையில் கருத்து மோதலில் ஈடுபட்டனர்.

பிரதிச் சபாநாயகர் அமைதியாக இருக்குமாறு அறிவித்தல் விடுத்தும் சபையில் சர்ச்சை நீடித்த நிலையில், எதிரணி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல மீண்டும் ஒழுங்குப் பிரச்னையொன்றை எழுப்பி, இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்தவுக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தினார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஹன்சாட்டிலிருந்து வசனத்தை நீக்கினாலும் அந்த வசனமானது நேரடி ஒலிபரப்பு ஊடாக முழு நாட்டுக்கும் ஒளிபரப்பப்பட்டுவிட்டது என சுட்டிக் காட்டினார்.

எனவே, இவ்வாறான அநாகரீகமான கருத்தை வெளியிட்ட இராஜாங்க அமைச்சருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக சபாநாயகர் இன்று பாராளுமன்றுக்கு வந்ததும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ் தெரிவித்தார்.

(அ)

# உரும்பிராய் கிழக்கு முதியவர்கள் கௌரவிப்பு!



வடமராட்சி, நவ. 09

கோப்பாய் தேசோதய சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கௌரவிப்பு உரும்பிராயில் இடம் பெற்றது.

கோப்பாய் தேசோதய தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு முதியவர்களை கௌரவித்தார்.

இந் நிகழ்வில் தேசோதய நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் திரு. ரமணன், கிராம முதியவர்கள், தேசோதய அமைப்பு பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-02)

# கொழும்புத் துறைமுகத்தில் 553 மில்லியன் டொலர் முதலீடு

கொழும்பு, நவ. 09

கொழும்பு துறைமுகத்தில் ஆழ்கடல் கப்பல் போக்குவரத்து கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு 500 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது.

உயர்தர உள்கட்டமைப்புக்கான நிதியுதவியை வழங்குவதில் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் அர்ப்பணிப்பு இந்த புதிய முனையத்தின் மூலம் பிரதிபலிக்கிறது என்று நாட்டில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த முதலீடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இந்தியா உட்பட அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்புக்கான அமெரிக்காவின் நிலையான அர்ப்பணிப்பை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

அதன்படி, கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள ஆழமான நீர் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்காக கொழும்பு வெஸ்ட் இன்டர்நஷனல் டெர்மினல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 553 டொலர் மில்லியன் நிதியுதவியை அறிவிப்பதற்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நாதன் இலங்கை வந்துள்ளார்.

(அ)

# நுவரெலியாவில் இன்று போராட்டம்!

## வர்த்தக நிலையங்களை மூடவும் ஏற்பாடு

கொழும்பு, நவ. 09

நுவரெலியாவின் பழமையான தபால் நிலையத்தை இந்தியாவின் தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு கைமாற்றுவதற்கு அரசு முன்னெடுத்துவரும் முயற்சிக்கு எதிராக இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தபால் ஊழியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்க அமைப்பினர் தெரிவித்தனர்.

நுவரெலியா தபால் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

நுவரெலியா தபால் நிலைய வளாகத்தில் புதிய ஹோட்டல் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் கடந்த 6 முதல் 7 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், தற்போது இவ் வேலை திட்டம் தீவிரமடைந்துள்ளது. இதற்கு எதிராக நுவரெலியா நகரில் உள்ள ஏழுக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து இவ் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளன எனவும், அதற்கு அனைவரும் இணைந்து ஆதரவினை வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

நுவரெலியா தபால் நிலையத்தை சுற்றுலா நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கான ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிர்ப்பினை தெரிவித்து விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையிலும் கடமைகளுக்கு சமுகளிக்காது நுவரெலியா தபால் பணியாளர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

மேற்படி போராட்டத்திற்கு ஆதரவாக நுவரெலியா நகரத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரை மூடுவதற்கு நகர வர்த்தக சங்கத்தினர் தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 12 வைத்தியசாலைகளுக்குப் பூட்டு!



மட்டக்களப்பு, நவ. 09

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிவருவதால் மட்டக்களப்பில் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் வைத்தியர் தியாகராஜா தவநேசன் தெரிவித்தார்.

“மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இன்று “வைத்தியர்களுக்கான பொருளாதார நியாயத்தை ஏற்படுத்துவோம்,இலவச சுகாதார சேவையை பாதுகாப்போம்” என்னும் தொனிப்பொருளில் வைத்தியர்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே வைத்தியர் தியாகராஜா தவநேசன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறிவருவதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 60வைத்தியசாலைகளில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே வைத்தியர்களின் வெளியேற்றத்தை தடுக்க அவர்களுக்கான பொருளாதார ரீதியான உறுதிப்படுத்தலை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

இலவச சுகாதார சேவையினை பாதுகாப்பதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றன.நாட்டை விட்டு வைத்தியர்கள் வெளியேறுதல், மருந்துகொள்வனவில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்கள் காரணமாக இலவச மருத்து சேவையானது முடக்கநிலையினை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது.

இதற்கு தீர்வாக ஆறு தீர்வினை ஆறு மாதங்களுக்கு முன்னர் அரசுக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வழங்கியிருந்தது.அதற்காக பல்வேறு அழுத்தங்களையும் அரசாங்கத்திற்கு வழங்கியிருந்தது. ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் உறுதியான நடவடிக்கையினை எடுக்காத நிலையில் இலங்கை அரசாங்கம் மாகாணம் தழுவிய தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுத்துவருகின்றது-என்றார்.

(அ)

## சமஷ்டி....

இலங்கையில் வடக்கு, கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சி மற்றும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்வு யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நேற்று இடம்பெற்றது.

இதுகுறித்து வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்ட ஊடக அறிக்கையிலையே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய எமது 100 நாள் செயல்முனைவின் இறுதி நாளான 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் 08ஆம் திகதி அன்று வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு" வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது. (அ)

## தனியார்....

கையளிக்கும் நடவடிக்கை நேற்றுக் காலை குறித்த பிரதேசத்தில் இடம்பெற இருந்த நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவித்து வருகை தந்த திணைக்களத் தலைவர்கள் அடங்கிய குழுவை திருப்பி அனுப்பியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்-

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்ணையன் குடியிருப்பு பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடைமுறைப்படுத்தும் கனியவள மணல் அகழ்வுக்கான ஆவணம் சட்டபூர்வமாக கையளிக்கும் நடவடிக்கைக்காக நேற்று மன்னார் மற்றும் தென் பகுதிகளில் உள்ள சுமார் 20 வரையிலான திணைக்கள அதிகாரிகள் பெருந்தொகையான வாகனங்களில் குறித்த பகுதிக்கு வருகை தந்தனர்.

குறித்த விடயத்திற்காக அதிகாரிகள் வருகை தருவதை அறிந்த அக்கிராம மக்கள் தங்கள் ஆலய மணிகளை ஒலிக்க வைத்து கிராம மக்களை ஒன்று திரட்டி வருகை தந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு செல்ல முடியாது பாதைக்கு குறுக்கே மரங்களை போட்டுத் தடை செய்தனர்.

அத்துடன் இச் சம்பவத்தை அறிந்து மன்னார் பிரஜைகள் குழுவினர், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள், மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் சம்பவ இடத்துக்குச் சென்று இப்பகுதிக்கு அதிகாரிகள் திடீர் என படையெடுத்து வந்த தன் நோக்கத்தை கேட்டறிந்தனர்.

அப்பகுதியில் கனியவள மணல் அகழ்வதற்கான இடங்களை பார்வையிட்டு அதற்கான அனுமதியை வழங்கும் நோக்குடனே இக்குழுவினர் வந்திருந்தமையை அறிந்ததும் மக்கள் திரண்டு இதற்கான எதிர்ப்பை தெரிவித்தனர்.

இந்த மணல் அகழ்வு மற்றும் காற்றாலைகளால் இப்பிரதேசம் எதிர் கொண்டு வரும் பாதிப்புகளை தெளிவாக வருகை தந்திருந்த அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி குறிப்பிட்ட இடத்திற்கு அவர்களை செல்ல விடாது பாதையை மறித்து அவர்களை திருப்பி அனுப்பியுள்ளனர்.

மன்னார் மாவட்ட சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகளின் தலைமையில் குறித்த குழுவினர் வருகை தந்த நிலையில் மக்கள் எதிர்ப்பை தெரிவித்து திருப்பி அனுப்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசமைப்பை....

பிரேமதாச, பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியினால் 3 ஆவது தடவையாகவும் அதன் பின்னரும் அனுப்பப்பட்ட பரிந்துரைகள் எதுவும் அரசியலமைப்பு பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டு நியமிக்கப்படவில்லை. இது அரசியலமைப்பு பேரவையின் சக உறுப்பினர்களுக்கும் தெரியும்.

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக 2 சந்தர்ப்பங்களில் தலா 3 மாதங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும், இரண்டாவது நியமனம் வழங்கப்படும் போது, அடுத்த நியமனம் நிரந்தர நியமனமாக இருக்க வேண்டும் என அரசியலமைப்பு பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியது.

பொலிஸ் மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்றாலும், அதனை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க அரசியலமைப்பு பேரவைக்கும் அதிகாரம் உள்ளது. அரசியலமைப்பின் ஏற்பாட்டு விதிகளை வியாக்கியானம் செய்வதில் எந்தப் பிரச்னையும் இல்லை என்றார்.

இதனையடுத்து எழுந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன உறுப்பினருமான விமல் வீரவன்ஸ, பதவிக்காலம் முடிந்த பொலிஸ்மா அதிபருக்கு தொடர்ந்தும் பதவி நீடிப்பு வழங்கப்படுகின்றது. எனினும் இதற்கு அரசியலமைப்பு பேரவை அனுமதி வழங்கவில்லை. அதனால் பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பு சட்ட ரீதியானது அல்ல. எனவே இது தொடர்பில் அரசு நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றார்.

இதன்போது எழுந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தின் அடிப்படையில் தற்போது நாட்டில் பொலிஸ் மா அதிபர் இல்லை. ஜனாதிபதி வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறி பதவி முடிந்த பொலிஸ்மா அதிபருக்கு பதவி நீடிப்பை வழங்கி வருகின்றார். எனவே அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டு வரமுடியும்-என்றார்.

## சட்டவிரோதமான...

குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அத்துடன், பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பில் அரசியலமைப்பின் தீர்மானத்தை மீறி ரணில் விக்கிரமசிங்க செயல்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் நிறைவடைந்திருந்தாக ஜீ. எல். பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அவரது சேவைக்காலம் இதுவரை நான்கு தடவைகள் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்காவது முறையாகவும் சீ.டி. விக்ரமரத்னவின் சேவைக்காலத்தை நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பு பேரவையிடம் அனுமதி கோரியிருந்தாலும் குறித்த அனுமதியை வழங்க பேரவை மறுத்திருந்தது.

பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட வேண்டிய நபரின் பெயர்கள் அதிபர் செயலகத்தால் அரசியலமைப்பு பேரவைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் இதனை தொடர்ந்து, பேரவையின் அனுமதியுடன் பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட வேண்டுமெனவும் ஜீ. எல். பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

எனினும், சீ.டி.விக்ரமரத்னவின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதி குறித்த செயல்முறையை பின்பற்ற வில்லை எனவும் அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்தை மறுத்து செயல்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது ஒரு சட்ட விரோதமான செயல் என்பதோடு தவறான உதாரணம் எனவும் ஜீ. எல். பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.

## கிரிக்கெட்...

அதேவேளை கிரிக்கெட் தொடர்பான பிரச்னையில் தற்போது எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் அடைய முயற்சிப்ப தாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் சபை திருடர்களின் கூடாரம் என நான் இந்த சபையில் நேற்று தெரிவித்தேன். அதற்கான நடவடிக்கை களை அமைச்சர் எடுத்துள்ளார். நீதிமன்ற தீர்ப்பு குறித்து நான் பேசப்போவதில்லை. அந்த முடிவுகளை விமர்சிக்க எனக்கு உரிமை இல்லைஎனவும் தெரிவித்தார். (அ)

## கச்சதீவு....

நடத்தப்படுகின்றது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன இந்திய ஊடகமொன்றுக்கு அறிவித்திருந்தார். அதேபோல இலங்கைக்கு கச்சதீவை வழங்குவதற்கு இந்திரா காந்தி எடுத்த நடவடிக்கை வரலாற்று தவறு என இந்திய பிரதமர் அண்மையில் அறிவித்ததையும் ஊடகங்கள் வாயிலாக அறியமுடிந்தது. இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியா சென்றிருந்தார்.

எனவே, வடக்கு கடல் எல்லை குறித்தும், கச்சதீவு குறித்தும் இந்திய கடனை இரத்துசெய்துகொள்வதற்காக ஏதேனும் உடன்பாட்டுக்கு வந்துள்ளீர்களா? இது தொடர்பில் வடக்கு மீனவர்களும் குழப்பம் அடைந்துள்ளனர். அவர்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது. எனவே, இது தொடர்பில் அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்.

தற்போது வடக்கு கடற்பரப்புக்குள் வந்து இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு எமது நாட்டு கடல் வளத்தை இல்லா தொழிக்கின்றனர். ஆனால் கைது செய்யப்படும் அவர்கள் இந்தியாவின் அழுத்ததால் விரைவில் விடுவிக்கப்படும் நிலைமையும் காணப்படுகின்றார்." - என்றார் நிரோஷன் பெரேரா. (அ)

## தூத்துக்குடியில்....

காங்கேசன்துறை, தூத்துக்குடி - கொழும்பு, ராமேஸ்வரம் - தூத்துக்குடி - கன்னியாகுமரி இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக அந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக மும்பையில் நடந்த சர்வதேச கடல்சார் உச்சி மாநாட்டில் டுபாயில் உள்ள தனியார் நிறுவனம் மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, தூத்துக்குடி - காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜனவரியில் தொடங்கப்படவுள்ளதுடன், இதற்கான கப்பல் விரைவில் தூத்துக்குடிக்கு வரவுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த கப்பலானது தினசரி 120 கடல் மைல் தொலைவை 3 முதல் 4 மணி நேரத்தில் கடக்கும் எனவும் 400 பயணிகள், 40 கார்கள், 28 பஸ்கள் மற்றும் ட்ரக்களை கொண்டு செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண கட்டணமாக 6000 இந்திய ரூபாவும், வர்த்தக வகுப்பு பயணிகளிடம் 12,000 இந்திய ரூபா கட்டணமும் அறவிடப்படவுள்ளது.

சுற்றுலாவிற்கு சொந்தமான கார்கள் மற்றும் பஸ்களில் செல்பவர்கள், தங்கள் கார்கள் மற்றும் பஸ்களையும் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு கொண்டு சென்று, மீண்டும் திரும்பி வர முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் 80 கிலோகிராம் எடையை மட்டும் தங்களுடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## நீதிபதியால்...

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது இந்த தகவல்களை வெளிப்படுத்தினார்.

அவர் வெளிப்படுத்திய தகவல்கள் வருமாறு-

2022 மார்ச் 23ஆம் திகதி அரசாங்கம் பலமாக இருந்தபோது அரசிலிருந்து வெளியேறினேன். அரசு கஸ்டமாக இருந்தபோது வெளியேறவில்லை. கோட்டாபய என்ற நபர் திருடவில்லை. 77 ஆம் ஆண்டு முதல் இருந்த பிரச்சினைகளை அவர் சுமந்தார். நாட்டில் எழுந்த போராட்டங்களுக்கு மதிப்பளித்து பதவியை துறந்தார்.

விளையாட்டின் முன்னேற்றத்துக்கு கிராமிய மட்டத்தில் இனம்கண்டு, தேசிய சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்ல திட்டமிட்டோம். இலங்கையிலுள்ள 66 சங்கங்களிற்கு இதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினேன். ரஃபி, உதைபந்தாட்டத்தில் சிறு சர்ச்சை ஏற்பட்டது. இந்த காலத்தில் 160 சர்வதேச பதக்கங்களை இலங்கை பெற்றது.

2022 ரி-20 கிரிக்கெட் உலக கிண்ண தொடரில் வீரர்கள், கிரிக்கெட் சங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. நிதிக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எழுந்த குற்றச்சாட்டுக்களை அடுத்து, 5 பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படுகிறது. எந்த கோப்புமில்லையென யாரோ ஜனாதிபதிக்கு சொல்லியுள்ளனர். இதோ அந்த அறிக்கை.

கிரிக்கெட் நிறுவனம் தொடர்பாக ஒட்டுமொத்த தடயவியல் அறிக்கை கோரினேன். அவ்வாறு தர முடியாதென கூறினார். அவர் உலகக்கிண்ணம் பற்றிய தடயவியல் அறிக்கை தர முடியுமென்றார். ஒட்டுமொத்த தடயவியல் அறிக்கை தருமாற கணக்காய்வாளர் நாயக்கத்துக்கு பாராளுமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்தால், கிரிக்கெட் நிறுவனத்துக்காக ஆஜரான சட்டத்தரணிகளின் ஆடை களையும்.

நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணிகள், தடயவியல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லையென்றனர். இதோ அந்த அறிக்கை. ஜனாதிபதி, சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் அறிக்கை அனுப்பப்பட்டது.

நீதிமன்றம் இந்த விவகாரத்தில் கணக்காய்வாளர் நாயக்கத்திடமே இறுதி அறிக்கை கோரும். சட்டமா அதிபர் ஏன் 2 மாதங்களாக கிரிக்கெட் நிறுவன மோசடிகளை நீதிமன்றம் கொண்டு செல்லவில்லை.

இந்த மோசடி தொடர்பில் ஆசிய கிரிக்கெட், சர்வதேச கிரிக்கெட் நிறுவனங்களுக்கும் ஆதாரங்களை அனுப்பி வைத்துள்ளேன். ஜெய் சாவிற்கு இதனை விசேட கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளேன் - என்றார். (அ)

## இலங்கை

பல விடயங்களை விளையாட்டு அமைச்சர் நேற்று வெளிப்படுத்தினார்.

இதையடுத்து, உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உத்தியோகபூர்வ சபையை நீக்குவதற்கு உடனடியாக கூட்டுத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டுமென பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி, ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இணைந்து இந்த தீர்மானத்தை எடுத்து, ஐசிசிக்கும் அறிவிக்க வேண்டுமென குறிப்பிட்டார்.

அப்படியொரு தீர்மானத்தை விவாதிக்க தயாராக இருப்பதாக தெரிவித்த ஆளும் தரப்பு, அதை முறைப்படி நாளை மேற்கொள்ள முடியுமென்றது.

இதையடுத்து, பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு நேற்று பிற்பகல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

அதில், இந்த விவாதத்தை இன்று முழுநாளும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# நியூஸிலாந்தில் 500 ஆண்டு பழமை வாய்ந்த மணியில் தமிழ் எழுத்துகள்!

வெலிங்டன், நவ. 09

**நியூஸிலாந்தின் தகவல் பொருள் அருங்காட்சியகத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த மணியொன்றில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.**

**அதனை கைகளால் தொட்டு ஆராய்ந்து பார்க்க அண்மையில் அங்கு சென்றிருந்த இலங்கையைச் சேர்ந்த குழுவினருக்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது.**



குறித்த மணியின் வயது 15ஆம் நூற்றாண்டுக்கும் 18ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் என ஆய்வாளர்கள் கணித்துள்ளார்கள்.

நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்ட ஒரு பாய்மரக் கப்பல் புயலில் சிக்குண்டு அதன் சிதிலங்கள் கரை ஒதுங்கிய போது ஒரு மரத்தின் வேர்களுக்குள் குறித்த மணி சிக்குண்டிருந்தது.

வெண்கலமணியைக் கண்டெடுத்த நியூஸிலாந்தின் ஆதிக்குடிகளான 'மௌரி' இன மக்கள் அது என்னவென்று தெரியாமல் உணவு தயாரிக்க இதனடியில் நெருப்பு மூட்டி உருளைக் கிழங்குகளை அவிப்பதற்குப் பயன்படுத்தி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலத்தின் பின்னர் 1899ஆம் ஆண்டு இதனைக் கண்டெடுத்த வரலாற்று ஆய்வாளர் வில்லியம் கொலென்ஸோ இந்த



வரலாற்றுச் சின்னத்தை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பு தற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

166 மி.மி உயரமும், 155 மி.மி சுற்றளவும் கொண்ட இந்த மணியில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துகள் எந்த மொழிக்குரியவை? எந்த நாடு எனக் கண்டுபிடிப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியில் இது தமிழ்மொழி என்பதுவும் அந்த நாளில் மிக முக்கிய துறைமுகங்களில் ஒன்றான நாகபட்டினத்தில் இருந்து புறப்பட்டு வந்த கப்பலின் மணி என்பதுவும் தெரியவந்துள்ளது.

இந்த மணியில் இப்போதும் தெளிவாகத் தெரியும் வகையில் பொறிக்கப்பட்டுள்ள வரி - 'முகைய்யத்தீன் பாகசுடைய கப்பல் மணி' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியராயினும் தம் தாய் மொழியான தமிழை தமது மொழி அடையாளமாய் மதிக்கும் ஒரு வரது கப்பல் எனப் புரிந்தது.

வாணிபத்தில் சிறந்து விளங்கிய நம் தொன்மைத் தமிழரின் அடையாளக் குறியீடாக தமிழ் எழுத்துகளைக் கண்ணுற்ற போது பெருமையாக உள்ளது என இலங்கையைச் சேர்ந்த குழுவினர் தெரிவித்தனர். (அ)

## உரும்பிராய் விபத்தில் இருவர் படுகாயம்



யாழ்ப்பாணம், நவ. 09

உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

உரும்பிராய் சந்தியில் இருந்து மருதனார்மடம் செல்லும் வீதியில் உரும்பிராய் சந்திரோதயா (ஞானபண்டிதர்) பாடசாலைக்கு அருகாமையில் நேற்று மாலை 2 மணியளவில் டிப்பர் மற்றும் ஹண்டர் ரக வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் இரு வாகனங்களின் சாரதிகளும் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் படுகாயமடைந்த சாரதிகள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதேவேளை விபத்துடன் தொடர்புடைய இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன. குறித்த விபத்து காரணமாக அப் பகுதியுடனான போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டது. (அ)

## அதிக மழையினால் மின் உற்பத்தி உயர்வு

கொழும்பு, நவ. 09

சிறிய நீர்மின் நிலையங்கள் 11.94விகிதம், சூரிய சக்தி நாளாந்த மின்சார உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தற்போது 76விகிதத்துக்கும் அதிகமாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கேற்ப அனல் மின் உற்பத்தி குறைந்துள்ளதுடன், அனல்மின் நிலையங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்து வரும் மழையுடனான காலநிலையால் நீர்மின் உற்பத்தி அதிகரித்துள்ளமையே இதற்கு பிரதான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் நாடு முழுவதும் வறண்ட கால நிலையுடன் காணப்பட்டது. இதனால், தேசிய மின்சக்தி அமைப்பு அனல் மின்சாரத்தை அதிகம் சார்ந்திருந்தது.

இதன் விளைவாக, மின்சார உற்பத்திக்காக நிலக்கரி மற்றும் எரிபொருளுக்கு திரும்ப வேண்டியிருந்தது. இதன் காரணமாக மின்சார உற்பத்தி செலவும் அதிகமாக இருந்தது.

அத்துடன், பொருளாதார நெருக்கடியின்போது, அனல் மின் உற்பத்திக்கான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கும், எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்கும் இலங்கை மின்சார சபை பாரிய செலவினங்களைச் சுமக்க வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும், இந்த நாட்களில் பெய்த கன மழையால், மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது, அதே நேரத்தில், நீர் மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

இதன்படி, தேசிய மின்கட்டமைப்புக்கான நீர்மின் உற்பத்தியின் பங்களிப்பு நேற்றுமுன்தினம் 57.31விகிதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும் பொறியியலாளருமான நோயல் பிரியந்த தெரிவித்தார்.

மேலும், சிறிய நீர்மின் நிலையங்கள் 11.94விகிதம், சூரிய சக்தி 5.41விகிதம் மற்றும் காற்றாலை மின்சாரம் 1விகிதம் என தேசிய மின்கட்டமைப்பில் பங்களித்துள்ளன.

தேசிய மின்கட்டமைப்பில் நேற்று 23.62விகிதம் அனல் மின் மட்டுமே பங்களிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய மின்கட்டமைப்பில் நேற்று சேர்க்கப்பட்ட திறனில் 76.38விகிதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சமாதானத்துக்கு குந்தகம் விளைவித்த 3 பெண்கள் உட்பட 23 பேர் மறியலில்!

யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிசாரால் சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் மத்தி கிராமத்தை சேர்ந்த 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேரே கைது செய்யப்பட்டனர்.

இந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் சிலர் தமக்குள் முரண்பட்டு தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வந்தனர். எதிர்தரப்பினரை தாக்குவதும், அவர்களின் வீடுகளை சேதப்படுத்துவதுமாக தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வந்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிசாருக்கு கிடைத்த பல்வேறு முறைப்பாடுகளை தொடர்ந்து, கோப்பாய் பொலிசார் நேற்று சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (அ)

## எரிசக்தி சீர்திருத்தங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு

கொழும்பு, நவ. 09

இலங்கையின் எரிசக்தி சீர்திருத்தங்களுக்கு ஆதரவு வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுக்கும் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதனுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் எரிசக்தி தொடர்பான சீர்திருத்தங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் ஸ்கொட் நேதன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எரிசக்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வலுசக்தி திறன் மேம்படுத்தல் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் பெண் ஆரோக்கியத்துக்கு முதலிடம்

**கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ**

கொழும்பு, நவ. 09

நாட்டில் பெரும்பான்மையானவர்கள் பெண்களாக இருந்தாலும், ஒரு நாடாக நாம் பெண்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுகிறோமா என்பது சிக்கலான விடயமே என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் 45 ஆவது கட்டமாக கொழும்பு யசோதரா மகளிர் கல்லூரிக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால், பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கூறினாலும்,நமது நாட்டில் பெண் தொழிலாளர் எண்ணிக்கை 32 சதவீதம்தான். இதில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

பெண்களுக்கு முறையான ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பு வழங்குவதில் பெண்களின் உரிமைகள் வலுப்பெறுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இது செயல்படுத்தப்படும். பெண் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காக தனியான வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும்.

கல்வி ஒரு நல்லொழுக்கமுள்ள, மேம்பட்ட மற்றும் ஞானமுள்ள நபரை உருவாக்கும் போது சுகாதார கட்டமைப்பு அந்நபரின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதால், கல்வி மற்றும் சுகாதாரத் துறையில் பாரிய புரட்சி ஏற்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது.

இதற்கு பழமைவாத பாரம்பரிய அபிவிருத்தி நோக்குகள் இல்லாமல், நவீனமயமாக்கல் இல்லாத பின்தங்கிய நிலை நோக்குகள் கைவிடப்பட வேண்டும்.

ஆரம்ப காலத்திலிருந்தே பெண்களின் ஆரோக்கியத்திற்கு நியூசிலாந்து,ஸ்காட்லாந்து போன்ற நாடுகள் முன்னுரிமை அளிப்பது போல் நாமும் எமது ஆட்சியில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தனி ஆளாக களத்தில் போராடி இரட்டை சதமடித்த மக்ஸ்வெல்

## ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது அவுஸ்திரேலியா



உலக கிண்ணத் தொடரின் 39ஆவது லீக் ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி, முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்கு 291 ஓட்டங்களை எடுத்தது. சட்ரன் 129 ஓட்டங்களும், ரஷித் கான் 35 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து, 292 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா அணி களமிறங்கியது.

டிராவிஸ் ஹெட் டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அடுத்து இறங்கிய மிட்செல் மார்ஷ் 24 ஓட்டங்களில் வெளியேறினார். டேவிட் வோர்னர் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஜோஷ் இங்கிலிஸ் டக் அவுட்டானார். இதனால் அவுஸ்திரேலியா அணி 8.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 49 ஓட்டங்களை எடுத்து திணறியது.

லபுசேன் 14 ஓட்டங்களிலும், ஸ்டோய்னிஸ் 6 ஓட்டங்களிலும், மிட்செல் ஸ்டார்க் 3 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் அவுஸ்திரேலியா 91 ஊட்டங்களுக்கு 7 விக்கெட்டை இழந்து திணறியது.

ஒருபுறம் விக்கெட்கள் வீழ்ந்தாலும் மேக்ஸ்வெல் அபாரமாக ஆடி சதமடித்தார். அவருக்கு தலைவர் பாட் கம்மின்ஸ் ஒத்துழைப்பு கொடுத்தார்.

இறுதியில், அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுக்கு 293 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. மேக்ஸ்வெல் 201 ஓட்டங்களுடன் ஆட்டமிலாகாது களத்தில் இருந்தார்.

ஆப்கானிஸ்தானின் நவீன் உல் ஹக், ஓமர்சாய், ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

# பங்களாதேஷ் பந்துவீச்சு பயிற்சியாளர் விசனம்!

பங்களாதேஸ் அணிக்கு எதிரான உலக கிண்ணப் போட்டியில் அஞ்சலோ மத்தியுஸ் ஆட்டமிழந்த முறை குறித்த சர்ச்சை தொடரும் அதேவேளை பங்களாதேஸ் அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் அலன் டொனால்ட் அதிர்ச்சியும் ஏமாற்றமும் வெளியிட்டுள்ளார்.


அந்த ஆட்டமிழப்பு பங்களாதேசின் சிறப்பான ஆட்டத்திலிருந்து கவனத்தை திசை திருப்பியுள்ளது என குறிப்பிட்டுள்ள அலன் டொனால்ட், நான் இன்னமும் அந்த ஆட்டமிழப்பு குறித்து அதிர்ச்சியடைந்துள்ளேன். இது தனிநபராக ஒரு கிரிக்கெட் வீரராக நான் பின்பற்றும் விழுமியங்கள் தொடர்பானது எனவும் தெரிவித்துள்ளார்.

எனது வாழ்நாளில் கிரிக்கெட் ஆட ஆரம்பித்தது முதல் நான் இவ்வாறான ஒரு விடயத்தை பார்க்கவில்லை எனவும் அலன் டொனால்ட் குறிப்பிட்டுள்ளார்.

படுக்கையில் இருந்தபடி நான் என்ன நடந்தது என்ன யோசித்தேன். அங்கு என்ன நடந்தது என்பதே எனது கேள்வி. நான் அணியின் ஓய்வறையில் அமர்ந்திருந்தபடி இந்த கேள்வியை கேட்டுக்கொண்டிருந்தேன். அங்கு கடும் மௌனத்தை கடைப்பிடித்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இலங்கையுடன் கைகுலுக்கவில்லை. இலங்கை களத்தடுப்பை பூர்த்தி செய்த பின்னர் என்ன நடக்கப் போகின்றது என்பது எனக்கு தெரியும். அவ்வாறே நடந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சு திறமைக்காக பாராட்டுகளை பெற்றுவரும் அலன் டொனால்ட்



சஹீப் அல்ஹசனும் அணியின் வீரர்களும் நடந்துகொண்ட விதம் அணி பின்பற்றும் கொள்கைகளை வெளிப்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் ஆடுகளத்திற்குள் சென்றுபோதும் நாங்கள் இவ்வாறான விடயங்களை ஏற்றுக்கொள்வதில்லை-நாங்கள் இவ்வாறான விடயங்களை ஏற்றுக்கொள்ளும் அணியில்லை என சொல்ல நினைத்தேன். அதுவே உடனடியாக எனது சிந்தனையாக காணப்பட்டது என குறிப்பிட்டுள்ள அலன் டொனால்ட், நான் தலைமைப் பயிற்றுவிப்பாளர் இல்லை. நான் அணிக்கு பொறுப்பாகவும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

உலகின் மிகவும் அச்சமூட்டும் வேகப்பந்துவீச்சாளராக விளங்கிய அலன் டொனால்ட் இதுபோன்ற ஒரு சம்பவத்தை மீண்டும் பார்க்க விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# 7 விக்கெட்களை இழந்தும் நம்பிக்கையுடன் இருந்தேன்



ஆப்கான் அணிக்கு எதிராக அபார வெற்றியை பதிவு செய்துள்ளது அவுஸ்ரேலியா. தோல்வியின் பிடியில் இருந்து ஆப்கான் வசம் இருந்த வெற்றியை பறித்துள்ளது. இந்தப் போட்டியில் இரட்டை சதம் அடித்து ஆட்ட நாயகன் விருதை வென்றிருந்தார் மக்ஸ்வெல்.

“நாங்கள் களத்தடுப்பு செய்த போது வெப்பத்தின் தாக்கம் அதிகம் இருந்தது. வெப்பத்தால் நான் அதிகம் உடற்பயிற்சி செய்யவில்லை. சரிவில் இருந்தபோதும் சாதகமான மனநிலையில் இருந்தேன். எங்களது துடுப்பாட்ட திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என நினைத்தேன். அதே நேரத்தில் எனது வழக்கமான ஷாட்களை ஆட வேண்டும் என்ற முடிவில் இருந்தேன். சான்ஸே இல்லாத இந்த இன்னிங்ஸை ஒரு சான்ஸ் எடுத்து பார்த்து ஆடியதில் மகிழ்ச்சி. அது எனக்கு பெருமையாக உள்ளது. எங்கள் அணிக்கு நம்பிக்கை அதிகம். இந்த ஆட்டத்தின் மூலம் அது மேலும் உயர்ந்துள்ளது என மேக்ஸ்வெல் தெரிவித்தார்.

128 பந்துகளில் 201 ஓட்டங்களை மக்ஸ்வெல் குவித்தார். இதன் மூலம் பல்வேறு சாதனைகளை அவர் படைத்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அவுஸ்ரேலிய அணிக்காக அதிக ஓட்டங்கள் குவித்தவர், உலகக் கிண்ணத்தில் அதிக சிக்ஸர்களை பதிவு செய்துள்ள வீரர்களில் 3 ஆவது இடம் (இதுவரை 43 சிக்ஸர்), ஒருநாள் கிரிக்கெட்டில் இலக்கை விரட்டிய போது அதிக ஓட்டங்கள் குவித்தவர், உலகக் கோப்பையில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் 3 ஆவது இடம் போன்ற சாதனைகளை அவர் படைத்துள்ளார்.



# ஷகிப் அல் ஹசன் அடுத்த போட்டியில் பங்கேற்பதில் சிக்கல்!

பங்களாதேஷ் அணித்தலைவர் ஷகிப் அல் ஹசன், இடது கை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக எதிர்வரும் உலகக்கிண்ண போட்டியில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அணிக்கு எதிராக இடம்பெற்ற போட்டியின் போது அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், இதனையடுத்து டெல்லியில் மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்ரே பரிசோதனையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து புனேவில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பங்களாதேஷ் அணி விளையாடும் இறுதிப் போட்டியில் அவர் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உலகக் கிண்ணத்தில் ஸ்டார்க் புதிய சாதனை

உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியில் 9 ஓவர்கள் வீசிய ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் 70 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினார்.

ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் ஷகிதியை போல்டாக்கி பெவிலியனுக்கு அனுப்பினார் மிட்செல் ஸ்டார்க். இந்த விக்கெட்டின் மூலம் உலகக் கிண்ணத்தில் ஸ்டார்க் புதிய சாதனை ஒன்றையும் படைத்துள்ளார்.

உலகக் கோப்பையில் அதிக வீரர்களை போல்டாக்கிய வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். இதுவரை 26 விக்கெட்டுகளை போல்ட் மூலம் மிட்செல் ஸ்டார்க் கைப்பற்றியுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் அதிக போல்ட் எடுத்த வீரர்கள்

மிட்செல் ஸ்டார்க் - 26 விக்கெட்டுகள்

வாசிம் அக்ரம் - 25 விக்கெட்டுகள்

லாசித் மலிங்கா - 18 விக்கெட்டுகள்

முத்தையா முரளிதரன் - 17 விக்கெட்டுகள்

கிளன் மெக்ராத் - 15 விக்கெட்டுகள்

# பாலஸ்தீனத்தை சுடுகாடாக்கும் இஸ்ரேலிய யூதவெறி அரசு

செ.கார்கி



நினைத்துப் பார்க்க முடியாத கொடூரங்களை இஸ்ரேல் பாலஸ்தீனத்தில் அரங்கேற்றிக் கொண்டு இருக்கின்றது. தினம் தினம் அங்கிருந்து வரும் காணொளிகள் உலகின் மனசாட்சியை உலுக்கிக் கொண்டு இருக்கின்றது.

உடல் சிதைந்த குழந்தைகளின் பிணங்களும், உறுப்புகளை இழந்த குழந்தைகளின் கதறலும், பெற்றோரை இழந்த குழந்தைகளின் பரிதவிப்பும், குழந்தைகளை இழந்த பெற்றோர்களின் ஆற்ற முடியாத பெருந்துயரமும் மனித சமூகம் இன்னும் விலங்கு நிலையில் இருந்து மீளவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது.

ஏறக்குறைய ஒரு மாதமாக நடைபெற்று வரும் போரில் இதுவரை 8000க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் 3000 குழந்தைகளும் அடக்கம்.

குடியிருப்பு பகுதிகள், மருத்துவமனைகள் என மக்கள் அதிகம் இருக்கும் பகுதிகளை இஸ்ரேலிய யூதவெறி ராணுவம் குறிவைத்து தாக்குதல் தொடுத்து வருகின்றது. இதன் மூலம் இஸ்லாமியர்களை இன அழிப்பு செய்யும் தனது திட்டத்தை பகிரங்கமாக செயல்படுத்தி வருகின்றது.

உலகத்திற்கு ஜனநாயகத்தை கற்றுக் கொடுப்பதற்காக அவதாரம் எடுத்துள்ள ஏகாதிபத்திய நாடுகள் எல்லாம் இந்த இனப்படுகொலையை வேடிக்கை பார்ப்பதோடு இனப்படுகொலையில் ஈடுபடும் இஸ்ரேலை ஆதரிக்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் மற்றும் ஜெர்மன் அதிபர் ஓலாஃப் ஸ்கோல்ஸ் ஆகியோர் வெளிப்படையாகவே இஸ்ரேலின் இனப்படுகொலையை ஆதரிக்கின்றார்கள். இவர்கள் மட்டுமல்ல உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்ளும் இந்தியா அரசும் வெட்கமே இல்லாமல் இஸ்ரேலை ஆதரிக்கின்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பிரதமர் மோடி “இஸ்ரேலில் பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றிய செய்தியால் இந்தியா மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளது, இந்த கடினமான நேரத்தில் நாங்கள் இஸ்ரேலுக்கு ஆதரவாக நிற்கிறோம்,” என்று அறிவித்திருக்கின்றார்.

இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்குமான உறவு என்பது இந்திய மக்களுக்கும் இஸ்ரேலுக்குமான உறவாக ஒரு போதும் இருந்ததில்லை. அது இந்திய பார்ப்பனக் கும்பலுக்கும் இஸ்ரேலிய யூத இனவாதக் கும்பலுக்குமான உறவாகவே வளர்த்தெடுக்கப்பட்டது.

அடிப்படையில் நாடாற்ற யூத இன வெறியர்கள் எப்படி பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கிக் கொண்டார்களோ, அதே போல நாடற்ற ஆரிய நாடோடிக் கூட்டம் இந்திய மக்களை தனது கருத்தியலால் அடிமைப்படுத்தி, இந்தியாவின் பூர்வகுடி மக்களைவிட தன்னை உயர்ந்த சக்தியாக கட்டமைத்துக் கொண்டு இன்றுவரை அரசியல் சமூக பொருளாதார மட்டங்களில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

அதனால் இந்திய பார்ப்பன சக்திகளின் நலனை முன்னிறுத்த வேண்டும் என்றால், இஸ்ரேலை ஆதரிப்பதைத் தவிர இந்திய ஆளும் வர்க்கத்திற்கு வேறு வழியே இல்லை. அதுமட்டுமில்லாமல் இந்திய ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்க நோக்கத்திற்குத் தேவையான ஆயுதங்களை அளிக்கும் நாடாகவும் இஸ்ரேல் இருந்து வருகின்றது.

1999 ஆம் ஆண்டு கார்கில் போரின் போது இந்தியாவிற்கு மோட்டார் மற்றும் வெடிமருந்துகளை இஸ்ரேல் வழங்கியது. இந்தியாவிற்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதில் ரஷ்யா, பிரான்சுக்கு அடுத்த மூன்றாவது பெரிய நாடாக இஸ்ரேல் இருந்து வருகிறது.

**இலங்கையில் சிங்கள ராணுவம் எப்படி உலக நாடுகளின் துணையோடு ஈழத்தமிழ் மக்களை படுகொலை செய்ததோ, அதே போல உலக நாடுகளின் துணையோடு பாலஸ்தீனியர்களை இஸ்ரேலிய யூதவெறி அரசு படுகொலை செய்து வருகின்றது.**

ஏறக்குறைய மொத்த ஆயுத இறக்குமதியில் 8.7 சதவீதத்தை இந்தியா இஸ்ரேலில் இருந்து இறக்குமதி செய்கின்றது. ரஷ்யாவில் இருந்து 47.2 சதவீதமும், பிரான்சில் இருந்து 29.2 சதவீதத்தையும் இறக்குமதி செய்கின்றது.

இன்று இஸ்ரேலை ஆதரிக்கும் பெரும்பாலான நாடுகள் ஆயுத வியாபாரத்தில் கொடி கட்டிப் பறப்பவையாகும்.

உலக ஆயுத உற்பத்தியில் உலக நாட்டாமை அமெரிக்கா மட்டும் 40 சதவீதத்தைக் கொண்டிருக்கின்றது. ரஷ்யா 16, பிரான்ஸ் 11, சீனா 5.2 ,ஜெர்மனி 4.2, இத்தாலி 3.8, இங்கிலாந்து 3.2, ஸ்பெயின் 2.6, தென்கொரியா 2.4, இஸ்ரேல் 2.3 என்ற விகிதங்களில் கொண்டிருக்கின்றது.

அதனால்தான் ஆயுத வியாபாரிகள் எப்போதுமே போரை ஆதரித்து வருகின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஒரு நாட்டை சின்னாபின்னமாக அழித்து மனித உயிர்களைக் கொன்று குவித்தால், அவர்களின் கல்லாபெட்டியில் பணம் கொட்டும்.

ஆயுதங்களுக்காக வெளிநாட்டிடம் கையேந்தி நிற்கும் இந்தியா போன்ற நாடுகள் ஒருபோதும் ஆயுத வியாபார நாடுகளை பகைத்துக் கொள்வதும் இல்லை. அதுமட்டுமில்லாமல் இஸ்ரேலுக்கும், இந்தியாவுக்குமான வர்த்தக உறவுகள் நேரடியாக இந்திய கார்ப்ரேட்டுகளின் நலத்தோடு பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்திருக்கின்றன.

இஸ்ரேலுக்கு பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நான்காவது பெரிய நாடாக இந்தியா இருக்கின்றது. 1992 இல் இஸ்ரேலோடு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதில் இருந்து, இந்தியா-இஸ்ரேல் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் வேகமாக முன்னேறி வருகின்றன.

2022-23 நிதியாண்டில், இஸ்ரேலுக்கான இந்திய சரக்கு ஏற்றுமதி 7.89 பில்லியன் டாலராகவும், இந்தியாவுக்கான இஸ்ரேலிய ஏற்றுமதி 2.13 பில்லியன் டாலராகவும் இருந்தது. ஆசியாவில் இஸ்ரேலின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியா உள்ளது.

இதை எல்லாம் கருத்தில் கொண்டால் இந்தியா ஆளும் வர்க்கமான பார்ப்பன, பனியா கும்பலின் நலன்களும், இஸ்ரேலிய யூதவெறிக் கும்பலின் நலன்களும் ஒன்றுக்கொன்று எவ்வாறு உறவாடிக் கிடக்கின்றது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

அதனால்தான் காஸாவில் உடனடி போர்நிறுத்தத்திற்கு ஆதரவாக ஐ.நா. பொதுச் சபையில் அக்டோபர் 27 இல் வாக்கெடுப்பு நடத்திய போது, அதில் இந்தியா வாக்களிக்காமல் இனப்படுகொலை குற்றவாளி இஸ்ரேலுக்கு ஆதரவாக நடந்து கொண்டது.

மொத்த வாக்குகளில் போர் நிறுத்தத்திற்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 14 வாக்குகளும் பதிவாகின. இந்தியாவைத் தவிர, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, இராக், இத்தாலி, ஸ்வீடன், யுக்ரைன், ஜிம்பாப்வே போன்ற நாடுகளும் இதில் பங்கேற்கவில்லை.

இதே போல 2014ல் நடந்த காஸா போரின் போது, பாலஸ்தீனிய குடிமக்களை இஸ்ரேல் திட்டமிட்டு படுகொலை செய்ததைக் கண்டித்து 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களின் போதும் பி.ஜே.பி. அரசாங்கம் வாக்களிக்காது ஒதுங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீனியர்களை இஸ்ரேலிய யூத இனவெறியர்கள் இனப்படுகொலை செய்வது இது முதன் முறை இல்லை. கடந்த 15 ஆண்டுகளில் மட்டும் பல முறை இஸ்ரேல் அத்துமீறி இருக்கின்றது.

2008 டிசம்பர் 27ம் தேதி தெற்கு இஸ்ரேலிய நகரமான ஸ்டெரோட் மீது பாலஸ்தீனியர்கள் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் 22 நாள் காசாவில் தாக்குதல் நடத்தியது. இதில் சுமார் 1,400 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

2012 நவம்பர் 14ல் ஹமாஸின் இராணுவ தளபதி அஹ்மத் ஜபாரியை இஸ்ரேல் கொன்றது. இதைத் தொடர்ந்து 2014 ஜூலை முதல் ஆகஸ்ட் மாதம் வரை ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 3 இஸ்ரேல் நாட்டு இளைஞர்கள் கொலை செய்யப்பட்டனர். இதையடுத்து ஏற்பட்ட போர் 7 வாரங்கள் நடந்தது. இதில் காசாவில் 2,100 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

2021ல் ஜெருசலேமில் உள்ள அல் அக்ஸா மசூதியில் இஸ்ரேலின் பாதுகாப்புப் படைகளுடன் மோதல் நடந்தது. இதில் 100க்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் காயமடைந்தனர். இதற்குப் பதிலடியாக பாலஸ்தீனம் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

அதன்பிறகு 2022 ஆகஸ்ட் மாதம் பெரிய அளவில் மோதல் ஏற்பட்டது. அதன்பிறகு இந்த ஆண்டு ஜனவரி மாதம் இஸ்ரேல் ராணுவம், அகதிகள் முகாமைத் தாக்கி 7 பாலஸ்தீனியர்களைக் கொன்றது. இதற்குப் பதிலடியாக பாலஸ்தீனம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

தற்போது நடக்கும் இந்தத் தாக்குதல் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் மிகவும் மூர்க்கத்தனமானதாகும். ஒரு தெளிவான இன அழிப்புத் திட்டத்தோடு இஸ்ரேல் போரில் ஈடுபட்டு வருகின்றது. இலங்கையில் சிங்கள ராணுவம் எப்படி உலக நாடுகளின் துணையோடு ஈழத்தமிழ் மக்களை படுகொலை செய்ததோ, அதே போல உலக நாடுகளின் துணையோடு பாலஸ்தீனியர்களை இஸ்ரேலிய யூதவெறி அரசு படுகொலை செய்து வருகின்றது.

காஸாவில் இணைய மற்றும் தகவல் தொலைதொடர்பு சேவைகள் முற்றிலுமாக முடக்கப்பட்டிருப்பது அங்கிருக்கும் சுமார் 23 லட்சம் மக்களை இஸ்ரேலிய யூதவெறி அரசு படுகொலை செய்யத் திட்டமிட்டிருப்பதையே அம்பலப்படுத்துகின்றது.

நம் காலத்தில் நடக்கும் மிகப் பெரிய இனப்படுகொலைகளுக்கு நாம் சாட்சியமாய் இருக்கின்றோம். மனித சமூகம் இதுவரை அடைந்திருக்கும் நாகரீக அறிவியல் வளர்ச்சி எல்லாமே எப்படி ஓர் இன அழிப்பை வேடிக்கை பார்க்கின்றது, அதை எப்படி ஆதரிக்கின்றது என்பதை எல்லாம் கனத்த மனதோடு கண்டுகொண்டு இருக்கின்றோம்.

ஆனால் மனிதம் செத்துவிடவில்லை என்பதை இன்று உலகம் முழுவதும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நமக்கு உணர்த்துகின்றன. உலகம் முழுவதும் மதவெறியர்களும் இன வெறியர்களும் போர்வெறியர்களும் மக்களை ஒட்டச் சுரண்டி கொழுக்கும் பணவெறியர்களும் வீழ்த்தப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருப்பதையே இது போன்ற நிகழ்வுகள் கட்டியம் கூறுகின்றன.

●

ஈழநாடு



# ‘எங்களுக்கு நியாயம் வேண்டும்’ மணிப்பூரில் நிர்வாணப்படுத்தப்பட்ட பெண்கள்!

திவ்யா ஆர்யா



வடகிழக்கு இந்தியாவில் இரண்டு பெண்களை ஒரு கும்பல் நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்று, கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்தனர். அந்தக் கொடூரமான வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகி ஆறு மாதங்களுக்குப் பிறகு, அவர்கள் பிபிசியிடம் முதல் முறையாக நேருக்கு நேர் பேட்டியளித்துள்ளனர்.

அவர்கள், தங்களின் தலைமறைவு வாழ்க்கை, நீதிக்கான போராட்டம் மற்றும் தங்களின் சமூகத்திற்கு தனி நிர்வாகத்திற்கான கோரிக்கை உள்ளிட்டவை குறித்து பேசினார்கள்.

நான் முதலில் அவர்களது தாழ்ந்த கண்களை மட்டுமே பார்த்தேன்.

பெரிய கருப்பு முகத்திரைகள், குளோரி மற்றும் மெர்சியின் முகங்களை மறைக்கின்றன. அவர்களின் தாவணிகள், அவர்களின் நெற்றியை மறைக்கின்றன.

அந்த இரண்டு குக்கி-ஜோமி பெண்கள் மற்றவர்களால் பார்க்கப்படுவதை விரும்பவில்லை. ஆனால், தங்களின் குரல்கள் வெளியே கேட்கப்பட வேண்டும் என விரும்பினர்.

அவர்களின் வேதனை படம்பிடிக்கப்பட்டு இணையத்தில் பகிரப்பட்டது. ஒரு நிமிடத்திற்கும் குறைவான அந்த வீடியோவில், நிர்வாணமாக இருந்த இரண்டு பெண்களைச் சுற்றி மெய்தேய் ஆண்களின் கும்பல் நடந்து செல்வதையும், அவர்களைத் தள்ளுவதும், தடுமாறச் செய்வதும், பின்னர் அவர்கள் கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட தாகக் கூறும் ஒரு வயலுக்கு இழுத்துச் செல்வதையும், காட்டுகிறது.

“நான் ஒரு விலங்கு போல நடத்தப்பட்டேன். அந்த அதிர்ச்சியுடன் உயிருடன் இருப்பதே போதும் என்றிருந்தது. ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு தாக்குதலின் வீடியோ வைரலானபோது, தொடர்ந்து வாழ்வதற்கான அனைத்து நம்பிக்கையையும் இழந்துவிட்டேன்,” என்று குளோரி உடைந்து கூறுகிறார்.


“இந்திய சமூகம் எப்படி இருக்கிறது, இதுபோன்ற சம்பவத்திற்குப் பிறகு அவர்கள் பெண்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்” என்கிறார் மெர்சி.

“எனது சொந்த சமூகத்தில் கூட மற்றவர்களை எதிர்கொள்வது எனக்கு கடினமாக உள்ளது. என் மானம் போய்விட்டது. நான் இனி ஒருபோதும் பழைய மாதிரி இருக்க முடியாது.” என்கிறார் அவர்.

அந்த வீடியோ அவர்களின் துன்பத்தை மேலும் அதிகரித்தது, ஆனால், அது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான சாட்சியாகவும் இருந்தது. மேலும், மே மாதத்தில், மணிப்பூரில் வெடித்த மெய்தேய் மற்றும் குக்கி சமூகங்களுக்கு இடையேயான இன மோதல்களை அனைவரின் கவனத்திற்கும் கொண்டு சென்றது.

**‘மக்களை சந்திப்பதற்கு பயமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது’**

ஒரு வகையில், அந்த வீடியோ பொது மக்களிடையே சீற்றத்தை ஏற்படுத்தி, நடவடிக்கைக்கு தூண்டினாலும், இந்த பெண்கள் மீது ஏற்பட்ட கவனம், அவர்களை இந்தப் போராட்டத்தில் இருந்து பின்வாங்கச் செய்தது.



தாக்கப்படுவதற்கு முன்பு, குளோரி ஒரு மாணவராக இருந்தார், மெர்சி தனது இரண்டு இளம் குழந்தைகளை கவனித்துக் கொள்வதிலும், வீட்டுப் பாடங்களுக்கு உதவுவதிலும், தேவாலயத்திற்குச் செல்வதிலும் கவனம் செலுத்தி வந்தார்.

ஆனால், தாக்குதலுக்குப் பிறகு இரு பெண்களும் வேறு ஊருக்கு தப்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது, அங்கு அவர்கள் தலைமறைவாக உள்ளனர். அவர்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள். நான்கு சுவர்களுக்குள் முடங்கியிருக்கும் மெர்சி தற்போது தேவாலயத்திற்குச் செல்வதில்லை, தனது குழந்தைகளையும் பள்ளிக்கு அழைத்துச் செல்வதில்லை.

“நான் முன்பு வாழ்ந்ததைப் போல என்னால் மீண்டும் வாழ முடியும் என்று நான் நினைக்கவில்லை. வீட்டை விட்டு வெளியேறுவது எனக்கு கடினமாக உள்ளது, மக்களை சந்திப்பதற்கு பயமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது,” என்றார் மெர்சி.

குளோரியும் அப்படித்தான் உணர்கிறார், அவர் இன்னும் அதிர்ச்சியில் இருப்பதாகவும், மக்களைச் சந்திக்க பயப்படுவதாகவும், கூட்டத்தைக் கண்டு பயப்படுவதாகவும் கூறினார்.

மனநல ஆலோசனை அவர்களுக்கு உதவியது என்றாலும், அவர்களுக்குள் கோபமும் வெறுப்பும் ஆழமாக ஊடுருவியிருந்தது. இனி எந்த ஒரு பெண்ணும் இப்படி நடத்தப்படக்கூடாது என்பதற்காக அவர்கள் பேச முடிவு செய்துள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு முன்பு, குளோரி, ஒரு கல்லூரியில் மெய்தேய் மற்றும் குக்கி சமூக மாணவர்கள் கலந்து இருந்த வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அங்கு அவருக்கு நிறைய நண்பர்கள் இருந்தனர். ஆனால் இப்போது அவர் இனி எந்த ஒரு மெய்தேய் நபரையும் பார்க்க விரும்பவில்லை எனக் கூறுகிறார்.

**“அவர்கள் என் கண் முன்னே இறப்பதை நான் பார்த்தேன்”**

“இனி, என் கிராமத்திற்கு நான் ஒரு போதும் செல்லமாட்டேன். நான் அங்கு தான் வளர்ந்தேன், அது எனது வீடு, ஆனால், இனி நான் அங்கு வாழ்வது அக்கம் பக்கத்தில் இருக்கும் மெய்தேய் இனத்தவருடன் பழக வேண்டிய நிலை ஏற்படும். நான் மீண்டும் அவர்களை சந்திக்கவே விரும்பவில்லை,” என்றார் அவர். மெர்சியும் அதனை ஒப்புக்கொண்டார்.

அவர்களது கிராமம் தாக்கப்பட்டு, அனைவரும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடியபோது, குளோரியின் தந்தையும் தம்பியும் கும்பலால் இழுத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர்.

“அவர்கள் என் கண் முன்னே இறப்பதை நான் பார்த்தேன்,” என அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெதுவாகக் கூறினார் குளோரி. தன்னைத் தற்காத்துக் கொள்ளும் முயற்சியில், தனது தந்தை மற்றும் தம்பியின் உடல்களை வயலில் விட்டுச் செல்ல வேண்டியிருந்ததாகக் கூறுகிறார் குளோரி.

இப்போது அவர்களைத் தேடிச் செல்ல முடியாது என்று அவர் கூறினார்.

வன்முறை வெடித்ததில் இருந்து, மணிப்பூரில் உள்ள மெய்தேய் மற்றும் குக்கி-ஜோமி சமூகங்களுக்கு இடையே எந்த தொடர்பும் இல்லை. இரு சமூகங்களின் தன்னார்வலர்கள், பொலிஸ் மற்றும் ராணுவத்தின் சோதனைச் சாவடிகளால் எல்லைக்கள் பிரிக்கப்பட்டு, மக்கள் அதற்குள் தான் வாழ்கிறார்கள்.

“அவர்களின் உடல்கள் எந்த சவக்கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன என்று கூட எனக்குத் தெரியவில்லை, என்னால் சென்று சரிபார்க்கவும் முடியாது. அரசு அவர்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்,” என்கிறார் குளோரி.

தாக்குதலில் வீடுகளும் கிராம தேவாலயமும் எப்படி தீக்கிரையாக்கப்பட்டன என்பதை மெர்சியின் கணவர் விவரித்தார்.

“நான் உள்ளூர் காவல்துறையை அழைத்தேன், ஆனால் அவர்களால் எங்களுக்கு உதவ முடியாது என்று சொன்னார்கள். காவல் நிலையமும் தாக்குதலுக்கு உள்ளானது. நான் சாலையில் ஒரு பொலீஸ் வேனைப் பார்த்தேன், ஆனால் அவர்களும் எதுவும் செய்யவில்லை,” என்றார் அவர்.

“என்னுடைய இயலாமையால் நான் சோகமாகவும் கோபமாகவும் உணர்கிறேன். என்னால் என் மனைவியையும் கிராம மக்களையும் காப்பாற்ற முடியவில்லை. சில நேரங்களில் நான் நடந்த அனைத்தையும் நினைத்து மிகவும் வருத்தப்படுகிறேன். துக்கம் மற்றும் கோபத்தில் மூழ்கியிருப்பதால், யாரையாவது கொல்ல வேண்டும் என்று உணர்கிறேன்.” என்றார் மெர்சியின் கணவர்.

**‘வீடியோ வெளியாகும்வரை எந்த நடவடிக்கையும் இல்லை”**

தாக்குதல் நடந்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அவர் காவல்துறையில் புகார் அளித்தார், ஆனால் ஜூலை மாதம் வீடியோ வெளியாகும் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விசாரணை நிலுவையில் இருக்கும் நிலையில், அந்த காவல் நிலையத்தில் இருந்த ஒரு அதிகாரி மற்றும் நான்கு காவலர்களை இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் கூறினர்.

அந்த வீடியோ வெளியானதைத் தொடர்ந்து ஏற்பட்ட பரவலான சீற்றம், வன்முறை குறித்து தனது முதல் கருத்தை வெளியிட பிரதமர் நரேந்திர மோடியை கட்டாயப்படுத்தியது. அதைத் தொடர்ந்து, கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஏழு பேரை போலீசார் கைது செய்தனர்.

தாக்குதலின் வீடியோ இணையத்தில் பரவத் தொடங்கியதிலிருந்து தங்களுக்கு கிடைத்த ஆதரவால் தாங்கள் நம்பிக்கையுடன் இருப்பதாக குளோரி, மெர்சி மற்றும் அவரது கணவர் கூறினர்.

“வீடியோ இல்லாமல், யாரும் உண்மையை நம்ப மாட்டார்கள், எங்கள் வலியைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்” என்றார் மெர்சியின் கணவர்.

மெர்சி இன்னும் கவலைப்படுகிறார். எதிர்காலத்தைப் பற்றியும், தனது குழந்தைகளைப் பற்றியும் நினைத்து அவர் பயப்படுகிறார்.

“இது என்னை மிகவும் தாழ்வாக நினைக்க வைக்கிறது,” என்றார் அவர்

தங்கள் சமூகத்திற்கென தனி நிர்வாகம் வேண்டும் என்று குளோரி கேட்டார்.

“பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கான ஒரே வழி அதுதான்” என்றார் அவர்.

குக்கி மக்கள் இந்த சர்ச்சைக்குரிய கோரிக்கையை பலமுறை முன்வைத்துள்ளனர், ஆனால் மெய்தேய் சமூகத்தால் இது எதிர்க்கப்படுகிறது, மாநிலத்தின் முதலமைச்சர், மெய்தேய் சமூகத்தை சேர்ந்தவர். மணிப்பூர் ஒருங்கிணைந்து இருக்க வேண்டும் என்ற அவர் பலமுறை வலியுறுத்தியுள்ளார்.